680

MAHALINGA AIYAR'S

# TAMIL GRAMMAR

REVISED BY

**V. G. Suryanarayana Sastriar, B.A.,**
*Late Head Tamil Pandit,*
*Madras Christian College.*

**Tenth Edition.**

**MADRAS:**
THOMPSON AND CO.
**1918.**

*All Rights Reserved.*

**Postage Extra.**

T3
P31(8).
N18
121517

உ

கடவுள் துணை

மழவை - மகாலிங்க ஐயரவர்கள்

இயற்றிய

# இலக்கணச் சுருக்கம்

இது
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ.
பார்வையிட்டது

பத்தாம் பதிப்பு

சென்னை
தாம்ஸன் கம்பெனியாரால்
மினேர்வா அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது

1918

Printed by Thompson & Co.,
at the "Minerva" Press, Broadway, Madras.

# முகவுரை.

இவ்விலக்கணச் சுருக்கம் இயற்றிய மழவை-மகாலிங்கையர் மிகவுஞ் சிறந்த பிராமணர்; சைவமதத்தில் அதிகம் பற்றுள்ளவர். இவர் திருத்தணிகைக் கல்விக்கடல் சரவணப் பெருமாளையரை யடுத்து முத்தமிழ்க் கலைகளும் முறையுடனோதி யுணர்ந்து மிகப் பேர்படைத்துச் சனங்களால் மகா வித்துவானென மதிக்கப்பட்டனர். இஃதுணர்ந்த துரைத்தனத்தாரும் இவரை யன்புடனாதரித்து கௌரவப் படுத்தினார்கள். இவர் பெரிய புராணத்தில் முதல் 900-செய்யுள்கட்கு உரையும், அருணாசல புராணத்திற் குறையும் மழவைச் சிங்காரசதகம் முதலிய பல நூல்களுமியற்றி யிருக்கின்றனர். இவர் அதியற்புத புத்திமான். ஆகவே மிகவும் சொற்சாதுரியம்படப் பேசுவார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்தவர்.

இனி இப்பதிப்பின் கண்ணே விதிகளை யொழுங்கு படுத்தியும், விதிகளை யுதாரணங்களோடு பொருத்தித் தெளிவாக விளக்கியும், அத்தியாவசியகமான வேறு சில விஷயங்களைச் சேர்த்தும், மாணாக்கர்களுக்கு இனிதாக விளங்கும் வண்ணம் அச்சிட்டிருக்கின்றனம். ஆங்கிலக் குறிப்புக்களும் ஆங்காங்குக் காட்டியிருக்கின்றனம்.

# இலக்கணச் சுருக்கம்.

## ON LETTERS.

## எழுத்தியல்.

### எழுத்தின் பெயரும் எண்ணும்.

1. மொழிக்கு முதற்காரணமாகிய ஒலிக்கு வரிவடிவில் அறிகுறியே எழுத்தாகும்.

இவ்வெழுத்து முதலெழுத்தென்றும், சார்பெழுத்தென்றும் இருவகைப்படும்.

2. உயிரும் மெய்யும் முதலெழுத்தென்றும், உயிர்மெய்யும் ஆய்தமும் சார்பெழுத்தென்றும் சொல்லப்படும்.

3. எழுத்து—உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என நான்கு வகைப்படும்.

4. உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு, ஆய்தம் ஒன்று, உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு ஆம்.

### உயிரெழுத்து—Vowels.

5. உயிரெழுத்து.—குறில், நெடிலென இருவகைப்படும்.

பிற எழுத்துக்களினுதவியின்றித்தானே தனித்து உச்சரிக்கப்படும் எழுத்து உயிரெழுத்தெனப்படும்.

6. அ, இ, உ, எ, ஒ இவ்வைந்துங் குறில் ஆம்.

குறில் : குறுகியொலிக்குமெழுத்து.

7. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெடில் ஆம்.

நெடில் : நீண்டொலிக்கு மெழுத்து.

## மெய்யெழுத்து.—Consonants.

8. மெய்யெழுத்து—வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

உயிரெழுத்தி னுதவியின்றித் தானே தனித்து உச்சரிக்கப் படாத எழுத்து மெய்யெழுத்தெனப்படும்.

எப்படி யோருடம்பானது உயிரில்லாவிடின் இயங்காதோ அப்படியே மெய்யெழுத்துக்களும் உயிரெழுத்துக்களில்லாமல் இயங்க மாட்டா.

9. க, ச, ட, த, ப, ற என்ற இவ்வாறும் வல்லினம் ஆம்.

இவை வலிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவன வாகையினலே யிப்பெயர் பெற்றன.

10. ங, ஞ, ண, ந, ம, ன என்ற இவ்வாறும் மெல்லினம் ஆம்.

இவை மெல்லிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவன வாகையினலே யிப்பெயர் பெற்றன.

11. ய, ர, ல, வ, ழ, ள என்ற இவ்வாறும் இடையினம் ஆம்.

இவை வலிய ஓசையும் மெல்லிய ஓசையுமின்றி அவ்விரண்டிற்கும் நடுத்தரமான ஓசையுடன் உச்சரிக்கப்படுவன வாகையினலே யிப்பெயர் பெற்றன.

## சுட்டெழுத்து. —Demonstrative Letters.

12. அ, இ, உ இம்மூன்றுஞ் சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும், புறத்துறுப்பாகவேனும் நின்று சுட்டுப்பொருளைத் தருமாயிற் சுட்டெழுத்தெனப்படும்.

(உ-ம்.) அவன், இவன், உவன்—அகச்சுட்டு.
அக்கொற்றன், இப்பலகை, உவ்வீடு—புறச்சுட்டு.

சுட்டுப்பொருளைத் தருதலாவது ஒரு பொருளைக்குறித்துக்காட்டும் அருத்தத்தைக் கொடுத்தலாம்.

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையுங் காட்டும்.

அவன் என்பதிலுள்ள அகரம்போலச் சொல்லிற்குள்ளாகவே யோரெழுத்தாய் அமைந்து பிரித்த காலத்து முதனிலையாகிய சுட்டெழுத்து மாத்திரம் பொருள் தந்து நிற்பது அகச்சுட்டு.

அக்கொற்றன் என்பதிலுள்ள அகரம்போலச் சொல்லிற்கு வெளியேயிருந்து பிரித்த காலத்து முதனிலையாகிய சுட்டெழுத்தும் மற்றைப்பகுதியுமாகிய இரண்டும் பொருள்தந்து நிற்பது புறச்சுட்டு.

அறம், இடை, உடு முதலிய சொற்களிலுள்ள அகர இகர உகரங்கள் ஒரு பொருளையுங் குறித்துக் காட்டாமையினாற் சுட்டெழுத்துக்கள் ஆகமாட்டா.

அ, இ, உ என்னும் இம்மூன்றும் அந்த, இந்த, உந்த எனத் திரிந்து வரும்.

## வினாவெழுத்து.—Interrogative Letters.

**13.** ஆ, ஓ சொல்லுக்கீற்றிற் புறத்துறுப்பாகவும், ஏ முதலில் அகத்துறுப்பாகவும், ஈற்றிற் புறத்துறுப்பாகவும், எ முதலில் அகத்துறுப்பாகவும், புறத்துறுப்பாகவும் நின்று வினாப்பொருளைத் தருமாயின் வினா எனப்படும்.

வினாவென்பது கேட்டலாம்.

(உ-ம்.) { தச்சனா=(தச்சன்+ஆ)
தச்சனோ=(தச்சன்+ஓ)
பொன்னனே+(பொன்னன்+ஏ) } ஆ, ஓ, ஏ ஈற்றிற் புறத்துறுப்பாக வந்தன.

(உ-ம்.) { எவன்
ஏவன் } எ, ஏ முதலில் அகத்துறுப்பாக வந்தன.

**14.** யா-என்னும் உயிர்மெய், சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும், புறத்துறுப்பாகவேனும் நின்று வினாப்பொருளைத் தந்தால் வினா எனப்படும்.

(உ-ம்.) { யாவன் / யாங்ஙனம் } யா முதலில் அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும் வந்தது.

அகச்சுட்டு, புறச்சுட்டு என்பனபோல வினாவின் கண்ணும் அகவினா, புறவினா என்பன உண்டு.

## Related Letters.

**15.** அகரத்துக்கு ஆகாரமும், இகரத்துக்கு ஈகாரமும், உகரத்துக்கு ஊகாரமும், எகரத்துக்கு ஏகாரமும், ஐகாரத்துக்கு இகரமும், ஒகரத்துக்கு ஓகாரமும், ஔகாரத்துக்கு உகரமும், ககரத்துக்கு, ஙகரமும், சகரத்துக்கு ஞகரமும், டகரத்துக்கு ணகரமும், தகரத்துக்கு நகரமும், பகரத்துக்கு மகரமும், றகரத்துக்கு னகரமும் இனவெழுத்தென்று சொல்லப்படும்.

இடையினம் ஆறும் ஓரினம் எனப்படும்.

**16.** உயிர்மெய் யெழுத்தாவது உயிரும் மெய்யுங் கூடிப் பிறக்கும் எழுத்தாம்.

(உ-ம்.) க்+அ=க, க்+ஆ=கா, க்+இ=கி, க்+ஈ=கீ முதலியன.

**17.** ஆய்தம் குற்றெழுத்துக்குப் பின்னும் உயிரெழுத்தோடு சேர்ந்த வல்லெழுத்துக்கு மேலும் வரும்.

(உ-ம்.) எஃது, கஃசு, இருபஃது.

**18.** உகரம், மாத்திரையின் சுருக்கத்தாலும், இயல்பாலும், குற்றியலுகரம், முற்றியலுகரம் என இருவகைப்படும்.

## குற்றியலுகரம்.—The Short உ.

19. ஒரு குறிலினாலும் இணைந்துவரும் இரண்டு குறிலினாலும் ஆக்கப்படாத மொழியீற்று வல்லின மெய்யின் மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

அஃது ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை நோக்கி நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் என அறுவகையாம்.

(1) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து உயிரும் உயிர்மெய்யுமாகிய நெடில்களுளொன்றாகவரின் அது நெடிற்றொடராம்.

(உ-ம்.) ஆடு, காசு, பாடு, ஓது, லோபு, ஏறு.

(2) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்துத் தனிநெடிலாகாமல உயிரும் உயிர்மெய்யுமாகிய குறினெடில்களுளொன்றாகவரின் அஃது உயிர்த்தொடராம்.

(உ-ம்.) அலகு, அரைசு, குருடு, தனது, அறிபு, களிறு.

(3) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து வல்லினமாகவரின் அது வன்றொடராம்.

(உ-ம்.) சுக்கு, கச்சு, பாட்டு, பூத்து, பார்ப்பு, பற்று.

(4) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து மெல்லினமாகவரின் அது மென்றொடராம்.

(உ-ம்.) சங்கு, நெஞ்சு, வண்டு, வந்து, நம்பு, கன்று.

(5) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து இடையினமாகவரின் அஃது இடைத்தொடராம்.

(உ-ம்.) செய்து, பல்கு, சார்பு, தெள்கு, போழ்து.

(6) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து ஆய்தமாக வரின் அஃது ஆய்தத் தொடராம்.

(உ-ம்.) எஃகு, கஃசு, பஃது, கஃறு.

☞ நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழிகளெல்லாம் ஈரெழுத்துடையன. மற்றையாவும் இரண்டுக்குமேற்பட்ட எழுத்துக்களுடையன. இக்குற்றியலுகரமெல்லாம் தமிழ் மொழிக்கேயாம்; வடசொற்களுக்குப் பெரும்பாலும் கொள்ளப்படா.

## The Full உ.

20. தனித்தும், தனிக்குறிலைச் சேர்ந்தும் வரும் வல்லின மெய்களின்மேலும், மெல்லின இடையின மெய்களின் மேலும் வரும் உகரம் முற்றியலுகரமாம்.

(உ-ம்.) கு, து, நடு, பசு, தாணு, கதவு.

## மாத்திரை.—Time-unit of Letters.

21. கண்ணிமைப்பொழுதும் கைநொடிப்பொழுதும் மாத்திரைக்களவாம்.

நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு; குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று; மெய்யெழுத்துக்கும், குற்றியலுகரத்துக்கும், குற்றியலிகரத்துக்கும், ஆய்தத்துக்கும், தனித்தனி மாத்திரை அரையாம.

உயிர்மெய்க்கு மெய்ம்மாத்திரை ஒழிய ஏறிய உயிர் மாத்திரையே மாத்திரையாம்.

22. பண்டமாற்றிலும், விளியிலும், இசையிலும், புலம்பலிலும் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச் சொன்ன அளவைக்கடந்து நீண்டொலிக்கும்.

## Initial Letters.

23. உயிரெழுத்து பன்னிரண்டும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பதுயிர்மெய்யெழுத்தும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம்.

உயிர்மெய் யெழுத்துக்களில் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக வருதலின் மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வருமாறு காண்க.

24. ஒன்பது மெய்களிற் க, ச, த, ந, ப, ம என்னும் இவ்வாறு மெய்யும் பன்னிரண்டுயிரோடுங்கூடி மொழிக்கு முதலாகும்.

(உ-ம்.) கடு, கால், கிள்ளை, கீழ்மை, குடில், கூந்தல், கொண்டை, கேழல், கைதவம், கொற்றவன், கோட்டம், கௌவை.

சம்பு, சார்பு, சிறவன், சீயம், சுகம், சூடகம், செப்பம், சேதகம், சைவம், சொல், சோம்பல், சௌரியம்.

தங்கை, தாளாண்மை, திசை, தீங்கு, துடி, தூய்மை, தெற்றி, தேட்டம், தையல், தொண்டை, தோயம், தௌவை.

நன்மை, நாடு, நிரை, நீட்சி, நுரை, நூல், நெல், நேர்மை, நைதல், நொடி, நோன்பு, நௌவி.

பதி, பாயல், பிதிர், பீழை, புகழ், பூண், பெண், பேதைமை, பையல், பொறுமை, போது, பௌவம்.

மதி, மாளிகை, மின், மீளி, முன், மூங்கில், மெல்லியல், மேடை, மையல், மொழி, மோத்தல், மௌவல் என வரும்.

25. வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்கிற எட்டுயிரெழுத்தோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) வழி, வாழை, விளி, வீடு, வெளி, வேலை, வைபம், வெளவால்.

26. யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஒள என்கிற ஆறுயிரெழுத்தோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

27. ஞகரம் அ, ஆ, இ, எ, ஒ என்கிற ஐந்துயிரெழுத்தோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) ஞமலி, ஞாலம், ஞிமிறு, ஞெண்டு, ஞொள்கிற்று.

## Final Letters.

28. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பதினோருயிரும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்கிற பதினொரு மெய்யுமாகிய இருபத்திரண்டெழுத்தும், மொழிக்கு இறுதியில் வரும்.

(உ-ம்.) பல, பலா, இடி, தீ, பந்து, பூ, சே, மனை, நொ, போ, கௌ, உரிஞ், மண், வெந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், காழ், புள் எனவரும்.

## போலி.—Interchange of Letters.

29. சில சொற்களில் ஒரெழுத்திருக்குமிடத்து வேறோரெழுத்து வருதலுமுண்டு. அவை போலி யெனப்படும்.

(*a*) அவற்றுள் இரண்டு குறிலையடுத்த அஃறிணைப் பெயரினிறுதியிலிருக்கிற மகரத்துக்கு னகரம் வரும்.

(உ-ம்.) பலம், பலன்; முகம், முகன்.

(*b*) அகரத்திற்குமுன் இகரமும், யகரமும், தனித் தனி வந்தால் ஐகாரத்தை ஒத்தொலிக்கும்.

(உ-ம்.) வைத்தியன், வயித்தியன், வைபம், வய்பம்.

(*c*) அகரத்துக்கு முன் உகரமும் வகரமும் தனித்தனி வந்தால் ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

(உ-ம்.) பௌத்தர், பவுத்தர்; ஔவை, அவ்வை.

(*d*) சில சொற்களின் முதலில் நகரத்துக்கு ஞகரம் போலியாகவரும்.

(உ-ம்.) நாயிறு, ஞாயிறு; நயம், ஞயம்.

(*e*) சில சொற்களின் இடையில் உள்ள தகரத்துக்குச் சகரம் போலியாகவரும்.

(உ-ம்.) பித்து, பிச்சு; வைத்தபொருள், வைச்சபொருள்.

(*f*) சில சொற்களின் இடையில் நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் முறையே போலியாகும். அச்சொற்களின் முதலில் ஐகாரம் இருக்கின் அதற்கு அகரம் போலியாக வரும்.

(உ-ம்.) உய்ந்தனன், உய்ஞ்சனன்; நீந்தினன், நீஞ்சினன்; ஐந்து, அஞ்சு; மைந்தன், மஞ்சன்.

(*g*) தொடர்மொழி ஐகாரத்தின் கீழ்நின்ற நகரத்துக்கும் ஞகரம் போலியாம்.

(உ-ம்.) ஐந்நூறு, ஐஞ்ஞூறு.

(*h*) சில சொற்களின் ஈற்று லகரத்துக்கு ரகரமும், சில குற்றியலுகரங்களுக்கு அர் என்பதும் போலியாம்.

(உ-ம்.) பந்தல், பந்தர்; சுரும்பு, சுரும்பர்; வண்டு, வண்டர்; சிறகு, சிறகர்; இடக்கு, இடக்கர்.

**Particles used in the Pronunciation of Letters.**

**30.** மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியையும், உயிர்நெட்டெழுத்துக்கள் காரச்சாரியையும், உயிர்க்குற்றெழுத்தும் உயிர்மெய்க்குற்றெழுத்தும், கரம், காரம் என்கிற இரண்டு சாரியையும் பெறும்.

(உ-ம்,) க, ங எனவும், ஆகாரமெனவும், ஐகாரமெனவும், அகரம், மகரம், அகாரம், மகாரமெனவும் வரும்.

மெய் சாரியை பெறுமலும், உயிர்மெய்ந்நெடில் சாரியை பெற்றும் வருவனவல்ல.

எழுத்தியல் முற்றிற்று.



## ON WORDS.
## பதவியல்.

---

31. எழுத்துக்கள் தனித்தாவது, இரண்டு முதலாகத் தொடர்ந்தாவது, ஒரு பொருளைத் தெரிவித்தாற் பதமாம். அது பகாப்பதமென்றும், பகுபதமென்றும் இருவகையாம்.

### Simple Words.

32. பகாப்பதமாவது, சொல்லைப் பகுத்தலாற் பகுதி, விகுதி முதலாகிய பிரயோசனமில்லாமல் ஒரு பொருளைக் காட்டுதற்கு ஏற்படுத்திய சொல்லாம்.

(உ-ம்.) பெயர்ப் பகாப்பதம்—கா, மண்.
வினை ,, வா, உண்.
இடை ,, ஏ, மற்று.
உரி ,, மா, நனி.

### Compound Words.

33. பகுபதமாவது சொல்லைப் பகுக்கும்போது பகுதிக்கும் விகுதிக்கும் வேறு பொருளுண்டாகி ஒரு பொருளைத் தெரிவிப்பதாம்.

34. பகுபதம் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் இவ்வாறுறுப்புக்களையும் பெற்றும், பகுதி விகுதிகள் அல்லாத மற்றைய வுறுப்புக்களிற் சில பெறாதும் வரும்.

பெயர்ப் பகுபதம்:—

(உ-ம்.) கூனி=கூன்+இ, எனப்பகுதி விகுதியால் முடிந்தது.

அறிஞன்—அறி+ஞ்+அன், எனப் பகுதி, விகுதி, இடைநிலை யால் முடிந்தது.

குழையான்—குழை+ய்+ஆன், எனப் பகுதி, விகுதி, சந்தி யால் முடிந்தது.

குழையினன்—குழை+ய்+இன்+அன், எனப் பகுதி, விகுதி, சாரியை, சந்தியால் முடிந்தது.

**வினைப் பகுபதம்:—**

(உ-ம்.) கேளாய்—கேள்+ஆய், எனப் பகுதி விகுதியால் முடிந்தது.

உண்டான்—உண்+ட்+ஆன், எனப் பகுதி, விகுதி, இடை நிலையால் முடிந்தது.

உண்டனன்—உண்+ட்+அன்+அன், எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியையால் முடிந்தது.

பிடித்தனன்—பிடி+த்+த்+அன்+அன், எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தியால் முடிந்தது.

நடந்தனன்—நட+த்+த்+அன்+அன், என மேற்குறித்த வுறுப்புக்கள் ஐந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகரவொற்று நகர வொற்றாகத்திரியும் விகாரத்தையும் பெற்று ஆறுறுப்பால் முடிந் தது.

## வினைப்பகுதிகள்.—Verbal Roots.

**35.** நட, வா, மடி, சீ, விடு, கூ, வை, நொ, போ, வௌ, உரிஞ், உண், தின், தேய், பார், செல், வாழ், கேள் இப்பத்தொன்பது ஈற்றினை யுடையனவுந் தெரிநிலைத் தன் வினைப் பகுதிகளாம்.

**36.** மேற்சொன்ன பகுதிகளின்மேல் வி, பி, து, சு என்கிற நான்கு விகுதிகளும் வந்தாற் பிறவினைப் பகுதி களாம்.

(உ-ம்.) கொல்வி, நடப்பி, நடத்து, பாய்ச்சு எனவரும்.

37. சில பகுதிகளின் இடையிலிருக்கும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதலாலும், நடுவில் ஓரொற்றுத் தோன்றுதலாலும் பிறவினையாவது உண்டு.

(உ-ம்.) எழும்பு, எழுப்பு; உருகு, உருக்கு எனவரும்.

## விகுதிகள்.—Terminations.

38. அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, ஆ, ஐ, என, அல், அம், ஆம், எம், ஏம், ஓம், க, இய, உம், இ, உ, தல், கை, பு, வி, உள், தி, சி, ஆய், இர், ஈர், மான், கள், தை, பி, ய், ள், ன், ஆல், மல், மே, கால், றி, று, வை, பாடு, கு, மை, காடு : இந்நாற்பத்தொன்பதும் பிறவும் விகுதிகளாம்.

39. அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ, ஆ, ஐ, ஆய், இர், ஈர், ஏன், அம், ஆம், எம், ஓம், உம், க : இவ்விருபதும் பிறவும் வினைமுற்று விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடந்தது, நடந்தன, நடவா, நடந்தனை, நடந்தாய், நடந்தனிர், நடந்தீர், நடந்தேன், நடந்தனம், நடந்தாம், நடந்தேம், நடந்தோம், நடக்கும், நடக்க எனவரும்.

40. அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார், மன், மான், கள், வை, கை, பி, ன், ள், ர் : இப்பத்தொன்பதும் பெயர் விகுதிகளாம்.

(உ-ம்.) குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், குழையன், யாது, பொன்னி, தேவிமார், வடமன், கோமான், கோக்கள், அவை, தங்கை, தம்பி, பிறன், மகள், பிறர் எனவரும்.

41. அ, உம் : இவ்விரண்டும் பெயரெச்ச விகுதிகளாம்.

(உ-ம்.) வந்த, வருகின்ற, நடக்கும்.

42. உ, இ, ய், அ, கு, ன், ஆல், கால், மல், மே, து, றி: இப்பன்னிரண்டும் பிறவும் வினையெச்ச விகுதிகளாம்.

(உ-ம்.) நடந்து, ஓடி, போய், நடக்க, உண்ணற்கு, நடக்கின், நடந்தால், நடந்தக்கால், உண்ணாமல், உண்ணாமே, அல்லது, அன்றி எனவரும்.

43. தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, மை, து: இவை பதினேழும் பிறவும் தொழிற்பெயர் விகுதிகளாம்.

(உ-ம்.) நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, வருகை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, நடவாமை, வருவது எனவரும்.

44. மை, ஐ, ப, கு, றி, று, அம், பம், நர்: இவை ஒன்பதும் பண்புப்பெயர் விகுதிகளாம்.

(உ-ம்.) நன்மை, தொல்லை, நண்பு, நன்கு, நன்றி, நன்று, நலம், ஒட்பம், நன்னர் எனவரும்.

45. இ, ஐ, அம்,—இம்மூன்றும் அலரி, பறவை, எச்சம் என வினைமுதற் பொருளையும்; ஊருணி, தொடை, தொல்காப்பியம் எனச் செயப்படுபொருளையும்; மண்வெட்டி, பார்வை, நோக்கம் எனக் கருவிப்பொருளையும் உணர்த்தும்.

46. கொள்,—தற்செயலில் வரும் விகுதியாம்.

(உ-ம்.) அடித்துக்கொள்.

47. உம்,—பிற்பொருட்டில் வரும்.

(உ-ம்.) வந்ததும் போனான்.

## Noun Compounds.

48. பெயர்ப்பகுபதம்.—பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்கிற அறினையும் அடியாகக் கொண்டு பிறக்கும்.

(உ-ம்.) பொன்னன், பட்டணத்தான், தாரண வருடத்தான், கண்ணன், கரியன், தட்டான்.

## Verbal Compounds.

**49.** வினைப்பகுபதம்.—தெரிநிலை, குறிப்பு என இரண்டு வகைப்படும்.

(உ-ம்.) நடந்தான், பொன்னனிவன்.

**50.** தெரிநிலை வினையாலணையும் பெயரும் பகுபதமாம்.

(உ-ம்.) வந்தவன் பாடுவான்.

## இடைநிலை.—Medial Particles.

**51.** பெயர்ப் பகுபதத்தைப் பகுதி விகுதியாகப் பிரிக்கும்போது நடுவில் யாதேனும் ஓரெழுத்திருந்தால் அது பெயர்ப் பகுபத இடைநிலை யென்று சொல்லப்படும்.

(உ-ம்.) வலைச்சி, வலைஞன் இவைகளில் சகரமும், ஞகரமும் இடைநிலையாக வந்தன.

இவற்றைப் பெயரிடைநிலை யென்றலும் உண்டு.

**52.** வினைப்பகுபத இடைநிலைகள் ஒன்பதாம்.

அவற்றுள் (*a*) த், ட், ற், இன் இந்நான்கும் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

(உ-ம்.) படித்தான், உண்டான், சென்றான், போயினான்.

(*b*) ஆநின்று, கின்று, கிறு இம்மூன்றும் நிகழ்காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

(உ-ம்.) உண்ணாநின்றான், உண்கின்றான், உண்கிறான் என வரும்.

(*c*) ப், வ் இவ்விரண்டும் எதிர்காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

(உ-ம்.) நடப்பான், வருவான் எனவரும்.

53. மேற்சொல்லிய வினைப்பகுபத இடைநிலைகளைச் செய்யுமென்னும் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினைமுற்று, செய்யுமென்னும் பெயரெச்சம், இகர யகர வீற்றுச் செய் தென்னும் வினையெச்சம், செய, செயின் என்னும் வினையெச்சங்கள் பெறாவாம். அஃதாவது அவ்வச்சொற்களிலுள்ள விகுதிகளே காலங்காட்டு மென்பதாம்.

(உ-ம்.) அவை நடக்கும், நீர் வருக, உண்ணாய், வருங்குதிரை, ஓடி, போய், நடக்க, நடக்கின் எனவரும்.

பதவியல் முற்றிற்று.

## SANSKRIT WORDS.

## வடசொல்.

54. ஆரியச்சொல் தமிழுச்சாரணம்பெற்று, தமிழெழுத்தி லெழுதப்பட்டுத் தமிழில் வந்து வழங்கும்போது வடசொல் என்னப்படும்.

55. அவ்வடசொல் தற்சமம், தற்பவம் என இரண்டு வகைப்படும்.

56. ஆரியச்சொல்லும், வடசொல்லும் உச்சாரணத்தினுற் சமமாயிருப்பின் அது தற்சமமாம்.

(உ-ம்.) கமலம், காரணம்.

57. ஆரியச்சொல் வடசொல்லாகும்போது ஏதேனும் விகாரங்களெய்தின் அது தற்பவமாம்.

58. அவற்றுள் ஜகாரம், மொழிக்கு முதலிற் சகரமாகவும், நடுவிற் சகரமாகவும் யகரமாகவும் திரியும்.

(உ-ம்.) ஜலம்=சலம்; விஜயம்=விசயம்; புஜம்=புயம்.

59. ஷகாரம், மொழிக்கு முதலிற் சகரமாகவும், இடையில் டகரமாகவும்திரியும்.

(உ-ம்.) ஷஷ்டி=சட்டி; விஷயம்=விடயம்.

60. க்ஷகாரம், இரண்டு ககரமாகவும், டகர சகரங்களாகவும், இரண்டு சகரமாகவும் திரியும்.

(உ-ம்.) சாக்ஷி=சாக்கி, சாட்சி; பிக்ஷை=பிச்சை.

61. ஸகாரம், சகரமாகவும், தகரமாகவும் திரியும்.

(உ-ம்.) மாஸம்=மாசம், மாதம்.

62. ஹ மொழிக்கு முதலில் அகரமாகவும், நடுவிற் ககரமாகவும் திரியும்.

(உ-ம்.) ஹரன்=அரன்; மோஹம்=மோகம்.

63. (*a*) ஆகாரவீறு ஐகாரமாகத் திரிந்தும் சிறுபான்மை திரியாதும் வரும்.

(உ-ம்.) மாலா=மாலை; தயா=தயா, தயை.

64. தமிழில் வசனமாக ஒரு நூல் செய்யும்போது மாலை, தச்சன் முதலிய சில சொற்கள் தவிர மற்ற சொற்களைத் திரியாமல் வடவெழுத்தையே எழுதிக்கொள்ள விருப்பமிருந்தாற் செய்யலாம்.

(உ-ம்.) மாஸம், மோஹம், பிக்ஷை.

வடசொல் முற்றிற்று.

## ON COMBINATION OF WORDS.

## புணரியல்.

65. புணர்ச்சியாவது இரண்டு மொழிகள் ஒன்றுபட் டிணங்குவதாம்.

66. அவற்றுள், முதலில் நிற்கும் மொழி நிலைமொழி யாம். அதற்குப்பின்னே வந்து அதனோடுசேரும் மொழி வருமொழியாம்.

(உ-ம்.) அவன் வந்தான்.

இதில் 'அவன்' நிலைமொழி, 'வந்தான்' வருமொழி.

67. நிலைமொழியீறும் வருமொழி முதலுமே புணர்ச்சி நிகழுமிடமாம்.

68. புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியென்றும், அல்வழிப்புணர்ச்சியென்றும் இருவகைப்படும்.

### Casal Combination.

69. வேற்றுமைப் புணர்ச்சியாவது ஐ, ஆல், கு, இன், அது, இல் என்னும் ஆறுருபுகளும் மொழிக்கு நடுவில் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) நீர் குடித்தான் | ... | உ-ஆம் வேற்றுமைத்தொகை. |
| நீரைக்குடித்தான் | ... | உ-ஆம் வேற்றுமை விரி. |
| கல்லெறிந்தான் | ... | ௩-ஆம் வேற்றுமைத்தொகை. |
| கல்லாலெறிந்தான் | ... | ௩-ஆம் வேற்றுமை விரி. |
| கூலிவேலை | ... | ௪-ஆம் வேற்றுமைத்தொகை. |
| கூலிக்குவேலை | ... | ௪-ஆம் வேற்றுமை விரி. |
| மலைவீழருவி | ... | ௫-ஆம் வேற்றுமைத்தொகை. |

| | | |
|---|---|---|
| மலையின் வீழருவி | ... | ரு-ஆம் வேற்றுமை விரி. |
| சாத்தன் கை | ... | சு-ஆம் வேற்றுமைத்தொகை. |
| சாத்தனது கை | ... | சு-ஆம் வேற்றுமை விரி. |
| காட்டுப்புலி | ... | எ-ஆம் வேற்றுமைத்தொகை. |
| காட்டிற்புலி | ... | எ-ஆம் வேற்றுமை விரி. |

## Non-Casal Combination.

**70.** அல்வழிப் புணர்ச்சியாவது வேற்றுமை உருபுகள் இடையில் வாராமல் நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வது. அது பதினான்கு வகைப்படும். [அப்பதினான்கு வகைகளையும் பின்வரும் உதாரணங்களிற் கண்டு கொள்க.]

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| 1. | கொல்யானை | ... | வினைத்தொகை. |
| 2. | கருங்குதிரை | ... | பண்புத்தொகை. |
| | சாரைப்பாம்பு | ... | இருபெயரொட்டுப்பண்புத்தொகை |
| 3. | மதிமுகம் | ... | உவமைத்தொகை. |
| 4. | இராப்பகல் | ... | உம்மைத்தொகை. |
| 5. | தேன்மொழி வந்தாள் | ... | அன்மொழித்தொகை. |
| 6. | சாத்தன் வந்தான் | ... | எழுவாய்த்தொடர். |
| 7. | சாத்தா வா | ... | விளித்தொடர். |
| 8. | வந்தகுதிரை | ... | தெரிநிலைப்பெயரெச்சத்தொடர். |
| | பெரியசாத்தன் | ... | குறிப்புப் பெயரெச்சத்தொடர். |
| 9. | வந்துபோனான் | ... | தெரிநிலைவினையெச்சத்தொடர். |
| | விருந்தின்றி யுண்ணான் | ... | குறிப்பு வினையெச்சத்தொடர். |
| 10. | வந்தான் சாத்தன் | ... | தெரிநிலை வினைமுற்றுத்தொடர். |
| 11. | பொன்னனிவன் | ... | குறிப்பு வினைமுற்றுத்தொடர். |
| 12. | மற்றொன்று | ... | இடைச்சொற்றொடர். |

13. நனிபேதை ... உரிச்சொற்றொடர்.
14. பாம்பு பாம்பு ... அடுக்குத்தொடர்.

71. இப்புணர்ச்சிகளுள் ஒவ்வொன்றும் இயல்பு புணர்ச்சி விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

72. நிலைமொழியும் வருமொழியும் ஒருவித வேறுபாடும் அடையாமற் புணர்வது இயல்பு புணர்ச்சியாம்.

(உ-ம்.) பொன்மணி; அலைபெரிது.

73. பதங்கள் ஒன்றோடொன்று புணரும்போது இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும், நிலைமொழியீற்றெழுத்தாவது வருமொழி முதலெழுத்தாவது திரிதலும், கெடுதலும் அடைந்த புணர்ச்சி விகாரப்புணர்ச்சி எனப்படும். இது சந்தி யென்றுஞ் சொல்லப்படும். இவ்வாறு ஒரெழுத்துத் தோன்றுவதை தோன்றல் விகாரமென்றும் திரிந்து வருவதைத் திரிதல் விகாரமென்றும் கெட்டு வருவதைக் கெடுதல் விகாரமென்றுஞ் சொல்லுவர்.

(உ-ம்.) மா + காய் = மாங்காய் } தோன்றல்விகாரம்.
ஆல் + காய் = ஆலங்காய் }
எள் + நெய் = எண்ணெய் ...திரிதல் விகாரம்.
மரம் + வேர் = மரவேர் ...கெடுதல் விகாரம்.

## உடம்படுமெய்.

74. இ, ஈ, ஐ இம்மூன்றும் உயிர்களுக்குமுன் உயிர் வந்தால் யகரம் உடம்படு மெய்யாகவரும்.

உயிரோடு உயிர்க்கு மயக்கமில்லாமையாலும் ஈருயிர் ஒருடம்பிலிருத்த லிசையாமையாலும் வருமுயிர்க்கு உடம்பாக அடுக்கும் மெய் உடம்படுமெய்யாம். அன்றி யீருயி

ரையும் உடன்படுத்தும் பொருட்டுவரும் மெய்யாதலின் உடம்படுமெய் என்னலுமாம். அப்பொழுது உடன்படு மெய் உடம்படுமெய் என்று மருவிற்று என்க.

(உ-ம்.) மணி + அழகு = மணியழகு, தீ + அழகு = தீயழகு, மனை + அழகு = மனையழகு எனவரும்.

**75.** அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ இவ்வாறு உயிருக்குமுன் உயிர் வந்தால் இடையில் வகரம் உடம்படுமெய்யாக வரும்.

(உ-ம்.) பல + அழகு = பலவழகு, பலா + அழகு = பலாவழகு, மது + அழகு = மதுவழகு, பூ + அழகு = பூவழகு, கோ + அழகு = கோவழகு, கௌ + அழகு = கௌவழகு எனவரும்.

அது, இது, உது, எது என்னும் உகரவீற்றுச் சுட்டுப் பெயர் முன்னும் வினாப்பெயர் முன்னும் உயிரெழுத்து வந்தால் நிலைமொழியினிடையே ஆய்தம் பெரும்பாலும் விரியும்; இது, எது: இவ்விரண்டும் முதல் நீளவும் பெறும்.

(உ-ம்.) அது + ஒளிரும் = அஃதொளிரும்.
இது + எங்கே = இஃதெங்கே; ஈதெங்கே.
உது + ஓடும் = உஃதோடும்.
எது + இருந்தது = எஃதிருந்தது; ஏதிருந்தது.

**76.** ஓரெழுத் தொருமொழியாகிய ஏ, சே, தே என்னும் பெயர்ச்சொல் ஏகாரத்துக்குமுன் உயிர்வந்தால் வகரமும், பண்புச்சொல்லின் விகாரமாகிய சே என்பதற்குமுன் உயிர்வந்தால் யகரமும், வகரமும் தோன்றும். இனி, ஏகாரத்தை எடுத்து உச்சரிக்கும்போது யகரமும், படுத்து உச்சரிக்கும்போது வகரமுந் தோன்றுதல் காண்க.

(உ-ம்.) ஏ + அழகு = ஏவழகு, சே + அழகு = சேவழகு, தே + அழகு = தேவழகு, சே + அடி = சேயடி, சேவடி எனவரும்.

77. இடைச்சொல் ஏகாரத்துக்குமுன் உயிர்வரின் யகரமே உடம்படுமெய்யாகும்.

(உ-ம்.) அவனே+அடித்தான்=அவனேயடித்தான்.

78. மெய்யெழுத்துக்குமுன் உயிர்வந்தால் அவ்வுயிர் மெய்யெழுத்தின்மேல் ஏறும். இதுவும் இயல்பு புணர்ச்சியேயாம்.

(உ-ம்.) வேல்+அழகு=வேலழகு.

79. தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யின்முன் உயிர்வந்தால் அந்தமெய் இரட்டும்.

(உ-ம்.) கல்+எறிந்தான்=கல்லெறிந்தான்.

80. எகரவினு முன்னும், சுட்டு முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரமும், மற்றை மூன்றினமும் வந்தால் அந்த அந்த எழுத்தும் மீதோன்றும்.

(உ-ம்.) எ+உயிர்=எவ்வுயிர், எ+யானை=எவ்யானை, அ+உயிர்=அவ்வுயிர், அ+யானை=அவ்யானை, எ+காலம்=எக்காலம், எ+நாள்=எந்நாள், எ+வலி=எவ்வலி, அ+காலம்=அக்காலம், அ+நாள்=அந்நாள், அ+வலி=அவ்வலி எனவரும்.

81. குற்றியலுகரத்தின் முன் உயிர்வந்தால் உகரங் கெட்டு அஃது ஏறிய மெய்யில் வந்த உயிரேறும்.

(உ-ம்.) நாடு=ஆண்டான்=நாடாண்டான்.

82. குற்றியலுகரம் வடமொழியா யிருந்தாற் கெடாது.

இதனைக் குற்றியலுகர மென்னாது முற்றுகரமென்னலே சிறப்பு.

(உ-ம்.) சம்பு+ஐ = சம்புவை, விண்டு + ஐ = விண்டுவை, இந்து+ஐ=இந்துவை எனவரும்.

83. தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த கு, சு, டு, து, பு, றுக்களாகிய முற்றிய லுகரத்துக்குமுன் உயிர்வந்தால் அவ்வுகரங் கெடாமல் உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்.) வெகு+அழகு=வெகுவழகு, பசு+அழகு=பசுவழகு, மடு+அழகு=மடுவழகு, மது+வழகு=மதுவழகு, தபு+ஒழிந்தது=தபுவொழிந்தது, மறு+அறுத்தான்=மறுவறுத்தான் எனவரும்.

84. டகர, றுகர வீறுகளையுடைய உயிர்த்தொடர்க் குற்றிய லுகரத்திற்கு முன்னும், நெடித்தொடர்க் குற்றிய லுகரத்திற்கு முன்னும், வேற்றுமையில் நாற்கணமும் வந்தால் உகரமேறிய மெய் இரட்டும்.

(உ-ம்.) உயிர்த்தொடர்.
- திறடு+ஆணி=திறட்டாணி
- திறடு+கோல்=திறட்டுக்கோல்
- திறடு+மூங்கில்=திறட்டுமூங்கில்
- திறடு+வாய்=திறட்டுவாய்
- மிடறு+ஒலி=மிடற்றொலி
- மிடறு+பாட்டு=மிடற்றுப்பாட்டு
- கிணறு+நீர்=கிணற்று நீர்
- வயிறு+வலி=வயிற்றுவலி

(உ-ம்.) நெடிற்றொடர்.
- காடு+ஆறு=காட்டாறு
- காடு+குதிரை=காட்டுக்குதிரை
- காடு+மரம்=காட்டுமரம்
- காடு+வாழ்க்கை=காட்டுவாழ்க்கை
- ஆறு+ஓரம்=ஆற்றோரம்
- ஆறு+கால்=ஆற்றுக்கால்
- ஆறு+மேடு=ஆற்றுமேடு
- ஆறு+வாய்க்கால்=ஆற்றுவாய்க்கால்

85. இக்குற்றியலுகரங்கள் பண்புத் தொகையிலும் இரட்டும்.

(உ-ம்.) குருடு + கண்=குருட்டுக்கண், மூடு + பூச்சி=மூட்டுப் பூச்சி, வறடு + ஆடு=வறட்டாடு, முயிறு + எறும்பு=முயிற்றெறும்பு.

**86.** எருது என்னும் உயிர்த்தொடரும் இரட்டும்.

(உ-ம்.) எருது + மாடு=எருத்துமாடு.

**87.** ஆறும்வேற்றுமைத் தொகையிலும் விரியிலும் இரட்டும்.

(உ-ம்.) ஆடு + கால்=ஆட்டுக்கால், ஆட்டினதுகால் எனவரும்.

**88.** மேற்சொல்லிய இருதொடரும் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம்வேற்றுமைத் தொகையிலும் இரட்டாவாம்.

(உ-ம்.) நாடு + ஆண்டான் = நாடாண்டான், காடு + சென்றான்=காடுசென்றான், தறடு + எறிந்தான் = தறடெறிந்தான், கிணறு + இழிந்தான்=கிணறிழிந்தான்.

**89.** தனிநெடில்மொழி முன்னும் குறில் நெடிலிணைந்த மொழி முன்னும் இருவழியும் வல்லினம் மிகும்.

(உ-ம்.) பூ + பூத்தது=பூப்பூத்தது, பூ + பறித்தான்=பூப்பறித்தான், சுறா + பாய்ந்தது=சுறாப்பாய்ந்தது, சுறா + பிடித்தான்=சுறாப்பிடித்தான் எனவரும்.

இரட்டலுக்கு மிகுதலுக்குமுள்ள பேதம் :—

(*a*) இரட்டலெல்லாம் நிலைமொழியோடு இயைபுடைத்தாயிருக்கும் ; மிகுதலெல்லாம் வருமொழியோடு இயைபுடைத்தாயிருக்கும்.

(*b*) இரட்டலில் முன்னுள்ள வெழுத்தே மீட்டும் தோன்றும் ; மிகுதலில் அவ்வாறன்றி வேறோரெழுத்துப் புதிதாய்த் தோன்றும்.

(உ-ம்.) கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்; இஃது இரட்டல், கற்று + கொண்டான் = கற்றுக்கொண்டான், இது மிகுதல்.

**90.** உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய உயிர்திணைப்பெயர், பொதுப்பெயர், வினைவை அடுத்தபெயர், விளிப்பெயர், எழுவாய்த்தொடர் இவ்வைந்தின் முன்னும் வல்லெழுத்து மிகாது.

[இவ்வாறு பொதுபடக் கூறினும் யரவொழிந்த ஒற்றீற்று உயர்திணைப்பெயர் முதலியவற்றின் முன் நிலைமொழியீற்று மெய் திரியாதியல்பாமெனக் கொள்க.]

(உ-ம்.) { தம்பி + கை = தம்பிகை / கண்ணன் + கை = கண்ணன் கை } உயர்திணைப்பெயர்.

{ நீ + குறியை = நீ குறியை / நீர் + குறியீர் = நீர் குறியீர் } பொதுப்பெயர்.

{ அவனு + கொண்டான் = அவனுகொண்டான். } வினைவையடுத்தபெயர்.

சாத்தா + கொடு = சாத்தாகொடு—விளிப்பெயர்.

{ நம்பி + தந்தான் = நம்பி தந்தான் / நளன் + கண்டான் = நளன்கண்டான். } எழுவாய்த்தொடர்.

**91.** பலவகையாகிய வினைமுற்றின் முன்னும், பெயரெச்சத்தின் முன்னும், வினைத்தொகை முன்னும் வல்லொற்று மிகாது.

(உ-ம்.) வந்தார் கொற்றர்...உயர்திணைப்படர்க்கை வினைமுற்று.

{ உண்டது குதிரை / உண்டன குதிரைகள் } அஃறிணைப்படர்க்கை வினைமுற்று.

வாழ்க கொற்றா......வியங்கோள் வினைமுற்று.

| | |
|---|---|
| உண்டி கொற்ரு<br>உண்டனை கொற்ரு<br>உண்டாய் கொற்ரு<br>உண்டீர் கொற்றரே | முன்னிலை வினைமுற்று. |
| ஓடு சாத்தா<br>உண்ணுய் கொற்ரு<br>உண்ணு கொற்ரு<br>உண்ணீர் கொற்றரே | ஏவல் வினைமுற்று. |

வந்த குதிரை ... ... ... பெயரெச்சம்.
குளிர்காற்று ... ... ... வினைத்தொகை.

[யகர ரகரங்க ளொழிந்த வொற்றீற்று உயர்திணை வினை முதலியன நிலைமொழியீற்று மெய்திரியா தியல்பாமெனக் கொள்க.]

92. உயிரீற்றுச் சுட்டுப்பெயர் முன்னும் வினைப்பெயர் முன்னும் வலிமிகாது.

(உ-ம்.) அது + குறிது=அது குறிது, எவை + குறிய=எவைகுறிய } சுட்டு.

எது + குறிது=எது குறிது, எவை + குறிய=எவை குறிய } வினை.

93. சுட்டுத்திரிபின் முன்னும், வினைத்திரிபின் முன்னும் வலிமிகும்.

(உ-ம்.) அந்த +குதிரை=அந்தக்குதிரை, எந்த + பையன்= எந்தப்பையன்.

94. உகரவீற்று விகாரவெண்ணுப் பெயர் முன் வலி மிகாது.

(உ-ம்.) ஒருசாண், இருகை, அறுசுவை, எழுகடல்.

95. உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய அஃறிணைப் பெயர்முன் வேற்றுமையில் வலிமிகும்.

(உ-ம்.) குதிரை + கால்=குதிரைக்கால், கிளி + சிறகு=கிளிச்சிறகு, நாய் + கால்=நாய்க்கால், தேர் + கால்=தேர்க்கால் எனவரும்.

**96.** பண்புத்தொகையின் கண் உயர்திணையிலும் அஃறிணையிலும் வலிமிகும்.

(உ-ம்.) நம்பி + கொற்றன் = நம்பிக்கொற்றன், சாரை + பாம்பு=சாரைப்பாம்பு.

**97.** சிறு என்னும் பண்படியின்முன் மாத்திரம் பெரும்பாலும் வலிமிகாது.

(உ-ம்.) சிறு + தரும்பு=சிறு தரும்பு.

**98.** சிறு, வெறு, குறு, நடு, புது என்னும் பண்படிகளின் முன் உயிர்வந்தால் உகரமேறிய மெய் இரட்டும்.

(உ-ம்.) சிறு + அப்பன்=சிற்றப்பன்.
வெறு + இலே=வெற்றிலே.
குறு + உடைவாள்=குற்றுடைவாள்.
நடு + ஆறு=நட்டாறு.
புது + உருக்குநெய்=புத்துருக்குநெய் எனவரும்.

**99.** சிறு என்பது தவிர, குறு, வெறு, நெடு, பெரு, அரு, கரு என்னும் பண்படிகளின் முன் வல்லினம் வந்தால் இனவெழுத்துத் தோன்றும்.

(உ-ம்.) குறு + கை = குறுங்கை, வெறு + பொய்=வெறும்பொய், நெடு + தூண்=நெடுந்தூண், பெரு + பேச்சு=பெரும்பேச்சு, அரு + பொருள்=அரும்பொருள், கரு + குதிரை=கருங்குதிரை எனவரும்.

**100.** பெரு, அரு, கரு என்பன உயிர்வந்தால் முதல் நீண்டேவரும்.

(உ-ம்.) பெரு + ஆசை=பேராசை, அரு + உயிர்=ஆருயிர், கரு + ஆடு=காராடு.

**101.** பல, சில என்னும் சொற்களின்முன் வலி இயல்பாம்.

(உ-ம்.) பல+பேச்சு = பலபேச்சு, சில + பொருள் = சில பொருள்.

102. இகர யகர ஈற்றுச்செய்தென்னும் வினையெச்சத்தின் முன்னும், அகரவீற்றுச் செயவென்னும் வினையெச்சத்தின் முன்னும், வல்லொற்றுமிகும்.

(உ-ம்.) ஆடி+கொண்டான்=ஆடிக்கொண்டான், போய்+கண்டான் = போய்க்கண்டான், பார்க்க + போனான் = பார்க்கப் போனான்.

103. மென்றொடர், இடைத்தொடர், ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர் உயிர்தொடர்களாகிய இக்குற்றிய லுகர மொழிகளுக்குமுன் அல்வழியில் வலிமிகாது.

(உ-ம்.) வந்து+போனான்=வந்துபோனான், செய்து தந்தான், ஆறு தூண், வரகு காய்த்தது.

104. சில மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரமாதலும், அதனோடு அம்முச்சாரியை பெறுதலும் உண்டு.

(உ-ம்.) இரும்பு+உலக்கை=இருப்புலக்கை.
கரும்பு + சாறு=கருப்பஞ்சாறு.

105. வன்றொடர்முன் இருவழியிலும் வலிமிகும்.

(உ-ம்.) அறுத்து+தந்தான்=அறுத்துத்தந்தான், கொக்கு+கால்=கொக்குக்கால், குறிப்பு + கள்=குறிப்புக்கள்.

106. அன்று, இன்று, என்று என்னும் மென்றொடரும், நேற்று என்னும் வன்றொடரும் ஐகாரச்சாரியை பெறும்.

(உ-ம்.) அன்று+கு=அன்றைக்கு, இன்றைக்கு, என்றைக்கு, நேற்றைக்கு.

3

**107.** படி என்னுமிடைச்சொல் வினையையடுத்துவரும் போது வலிமிகாமையும், சுட்டு வினாவையடுத்து வரும் போது வலி மிகுதலும் உண்டாம்.

(உ-ம்.) வரும்படி சொன்னான், அப்படிச்செய்தான்.

**108.** தனை, அளவு என்னும் பண்புச்சொல்முன் வலி மிகாது.

(உ-ம்.) அத்தனைபேச்சு, அவ்வளவுபேச்சு.

**109.** அன்றி, இன்றி என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம், மெல்ல, பைய, வலிய என்னும் உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம் இவைகளுக்குமுன் வலிமிகும்.

(உ-ம்.) அன்றி + போனான்=அன்றிப்போனான், இன்றி + கண்டான்=இன்றிக்கண்டான், மெல்ல + பேசினான்=மெல்லப்பேசினான், பைய + சென்றான்=பையச்சென்றான், வலிய + சொன்னான்= வலியச்சொன்னான்.

**110.** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வல்லொற்று மிகும்.

(உ-ம்.) நடவா + குதிரை=நடவாக்குதிரை, இல்லா + பொருள்=இல்லாப்பொருள்.

**111.** உயிரீற்றுச் சில மரப்பெயர்முன் வலிவந்தால் இனவெழுத்துத் தோன்றும்.

(உ-ம்.) மா + காய்=மாங்காய்.
விளா + காய்=விளாங்காய்.

**112.** ஐகார ஈற்றுச் சில மரப்பெயர்க்குமுன் ஐகெட்டு அம்முச்சாரியை தோன்றும்.

(உ-ம்.) எலுமிச்சை + காய்=எலுமிச்சங்காய்.
மாதுளை + கனி=மாதுளங்கனி.
தாழை + பூ=தாழம்பூ.

நாரத்தை + பழம் = நாரத்தம்பழம்.
தூதுளை + கீரை = தூதுளங்கீரை.
பாவட்டை + காய் = பாவட்டங்காய்.

113. இகர உகரங்களையும் லகரத்தையும் ஈற்றிலுடைய சொற்களின் முன்னும் அம்முச்சாரியை தோன்றும்.

(உ-ம்.) புளி + காய் = புளியங்காய், புன்கு + காய் = புங்கங்காய், ஆல் + காய் = ஆலங்காய் எனவரும்.

114. ஒன்று என்னும் எண் வருமொழியோடு புணரும்போது ஈற்றுயிர்மெய்கெட்டு னகரம் ரகரமாய் அதன் மேல் உகரச்சாரியைவரும்.

(உ-ம்.) ஒன்று + கழஞ்சு = ஒருகழஞ்சு, ஒருநாள்.

(*a*) வருமொழி உயிராயின், முதல் நீண்டு உகரச்சாரியை கெடும்.

(உ-ம்.) ஒரு + ஆயிரம் = ஓராயிரம், ஓரம்பு.

115. இரண்டு என்னும் எண் வருமொழியோடு புணரும்போது இகரமும் ரகர ஒற்றுமே நின்று, மற்றைய எழுத்தெல்லாங் கெட உகரச்சாரியை பெறும்.

(உ-ம்.) இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு, இருநாள்.

(*a*) உயிர்வரின், முதல்நீண்டு உகரச்சாரியை கெடும்.

(உ-ம்.) இரண்டு + ஆயிரம் = ஈராயிரம், ஈருயிர்.

116. மூன்று என்னும் எண் உயிர்வரின் ஈற்றுயிர்மெய்யும் னகரமுங்கெடுதலும், மெய்வரின் முதற்குறுகி ஈறுகெட்டு னகரம் வருகிற மெய்யாகத் திரிதலுமாம்.

(உ-ம்.) மூன்று + ஆயிரம் = மூவாயிரம், மூன்று + கலம் = முக்கலம், மூன்று + நாழி = முந்நாழி, மூன்று + வட்டி = முவ்வட்டி.

மூன்று என்னும் நிலைமொழியின் முன் வகரம் வந்தால் முதற் குறுகாமையுமாம்.

(உ-ம்.) மூன்று + வகை=மூவகை.

**117.** நான்கு என்னும் எண் ஈறுகெட்டு னகரம் லகர றகரமாகத் திரியும்.

(உ-ம்.) நான்கு + ஆயிரம்=நாலாயிரம், நான்கு + பத்து=நாற்பது எனவரும்.

**118.** ஐந்து என்னும் எண் மெய்வரின் ஈறுகெட்டு நகரம் வருகிற மெய்யாதலும் அதற்கினமாதலும் உயிர்வரிற் கெடுதலுமாம்.

(உ-ம்.) ஐந்து + மூன்று=ஐம்மூன்று, ஐந்து + கலம்=ஐங்கலம், ஐந்து + ஆயிரம்=ஐயாயிரம்.

**119.** ஆறு என்னும் எண் குறுகலும் இயல்புமாம்.

(உ-ம்.) ஆறு + தொழில்=அறுதொழில், ஆறு + முகம்=அறுமுகம்.

உயிர் முதன்மொழிவரின் முதற்குறுகா தியல்பாகவே வரும்.

(உ-ம்.) ஆறு + ஆயிரம்=ஆறாயிரம்.

**120.** ஏழு என்னும் எண் உயிர்வரின், ஈற்றுகரங்கெடுதலும், மெய்வரின் முதற் குறுகலும் குறுகாமையுமாம்.

(உ-ம்.) ஏழு + ஆயிரம்=ஏழாயிரம், ஏழு + கடல்=எழுகடல், ஏழு + பணம்=ஏழுபணம் எனவரும்.

**121.** எட்டு என்னும் எண் உயிரும் மெய்யும் முதலாகிய எண்ணுப்பெயர்கள் வந்தால் ஈறுகெட்டு டகரம் ணகரமாம்.. மற்றைய மெய்ம்முதற் பெயரும் உயிர்முதற் பெயரும் வந்தால் வழக்கத்திலியல்பாம்.

(உ-ம்.) எட்டு + ஆயிரம்=எண்ணாயிரம், எட்டு + நூறு=எண்ணூறு, எட்டு + மாடு=எட்டுமாடு, எட்டு + இலை=எட்டிலை.

**122.** ஒன்பது என்னும் எண்முன் எண்களல்லாத மற்ற உயிர்முதன் மொழிகளும் மெய்ம்முதன் மொழிகளும் வந்தால், முறையே பொதுவிதிகளிற் சொல்லியபடி உகரங் கெட, நின்ற மெய்யின்மே லுயிரேறலும் இயல்புமாம்.

(உ-ம்.) ஒன்பது + ஆடு = ஒன்பதாடு, ஒன்பது + பாட்டு = ஒன்பதுபாட்டு.

**123.** பத்து என்னும் எண்முன் 'இரண்டு' வந்தால் ஈற்றுயிர்மெய் கெட்டுத் தகரவொற்று னகரமாகும்.

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு.

**124.** பத்து என்பதன் முன் ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு இவ்வேழெண்களும் உம்மைத் தொகையிலும், 'ஆயிரம்' பண்புத்தொகையிலும் வந்தால் ஈற்றுயிர்மெய் கெட்டு இன்சாரியை தோன்றும்.

(உ-ம்.) பத்து + ஒன்று = பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு, பதினாயிரம் எனவரும்.

**125.** பத்து என்பதன் முன் 'ஒன்று' முதலாகிய எண்களும் 'ஆயிர'மும் வந்தாற் பண்புத்தொகையில் ஈற்றுயிர்மெய் கெட்டு 'இற்று'ச்சாரியை தோன்றும்.

(உ-ம்.) பத்து + ஒன்று = பதிற்றொன்று, பதிற்றுமூன்று, பதிற்றுநான்கு, பதிற்றாயிரம்.

**126.** இரண்டுமுதல் எட்டீறாகிய எண்களின்முன் பத்தென்னும் எண்வந்தாற் பத்தின் இடையில் நின்ற தகரங் கெடும்.

(உ-ம்.) இரண்டு + பத்து = இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எண்பது.

**127.** இருபது முதல் எண்பதீருகிய எண்களின் முன் ஒன்றுமுதல் ஒன்பதெண்ணும் அதையடுத்த பிறபெயரும் வந்தால் நிலைமொழியீற்றுக்கு அயலில் தகர ஒற்றுத் தோன்றும்.

(உ-ம்.) இருபது + இரண்டு = இருபத்திரண்டு, முப்பத்துநான்கு, அறுபத்தேழரை, எண்பத்தொன்பது, பாய் எனவரும்.

**128.** இருபதுமுதல் எண்பதீருகிய எண்களின்முன்னும், ஒன்பது என்பதன் முன்னும், 'ஆயிரம்' வந்தால் இடையில் 'இன்' சாரியை தோன்றும்.

(உ-ம்.) இருபது + ஆயிரம்=இருபதினுயிரம், அறுபதினுயிரம், எண்பதினுயிரம், ஒன்பதினுயிரம் எனவரும்.

**129.** ஒன்று முதற் பத்தீருகிய எண்களனைத்தும் இரட்டித்து வந்தால், நிலைமொழியின் முதலெழுத்தல்லாதவைகளெல்லாங் கெட, வருமொழி உயிர் முதன்மொழியாயின் வகரமும், மெய்ம்முதன் மொழியாயின் வந்தமெய்யும்மிகும்.

(உ-ம்.) ஒன்று + ஒன்று=ஒவ்வொன்று, இரண்டு + இரண்டு= இவ்விரண்டு, மூன்று + மூன்று=மும்மூன்று, நான்கு + நான்கு = நந்நான்கு, ஐந்து + ஐந்து=ஐவைந்து, ஆறு + ஆறு=அவ்வாறு, ஏழு + ஏழு=எவ்வேழு, எட்டு + எட்டு=எவ்வெட்டு, ஒன்பது + ஒன்பது= ஒவ்வொன்பது, பத்து + பத்து=பப்பத்து எனவரும்.

**130.** ஒன்பது என்னும் எண்முன் பத்து என்பது வந்தாற் 'பது' கெட்டு னகரம் ணகரமாகி, முதலிலிருக்கும் ஒகரம் தகர ஒற்றிலேறி, வருமொழியாகிய பத்து நூருகத் திரியும்.

(உ-ம்.) ஒன்பது + பத்து=தொண்ணூறு.

[தொள் + நூறு=தொண்ணூறு, என்றுகொண்டு, தொளையுண்ட நூறு, அஃதாவது பத்துக்குறைந்து நூறு என்று உரைப்பாரு முளர்.]

131. ஒன்பது என்பதன் முன் 'நூறு'வந்தாற் 'பது' கெட்டு னகரம் ளகரமாகி, நிலைமொழி ஒகரம் தகர வொற்றி லேறி, வருமொழி 'ஆயிர' மாகத் திரியும்.

(உ-ம்.) ஒன்பது + நூறு=தொள்ளாயிரம்; இக்காலத்தில் இது தொளாயிரம் என வழங்குகிறது.

[தொள் + ஆயிரம்=தொள்ளாயிரம், என்றுகொண்டு முன்னர்த் தொண்ணூறுக்கு உரைத்தாங்கு உரைத்தலுமுண்டு.]

132. உயர்ந்த எண்முன் தாழ்ந்த எண் வந்தால் ஏகா ரச் சாரியை வரும்.

(உ-ம்.) ஒன்று + கால்=ஒன்றேகால், இரண்டு + முக்கால்=இர ண்டேமுக்கால், கலன் + குறுணி=கலனேகுறுணி.

133. ஒன்று முதலாகிய எண்களின் முன் அரை என் னும் எண்வந்தால் அவை சாரியை பெறுவாம்.

(உ-ம்.) இரண்டு + அரை=இரண்டரை.
ஏழு + அரை=ஏழரை.

134. கிழக்கு என்பது பிறபெயரோடு புணரும்போது ஈற்றுயிர் மெய்யுங் ககர வொற்றும் அகரவுயிருங் கெட்டு முதல் நீளும்.

(உ-ம்.) கிழக்கு + கடல்=கீழ்கடல், கிழக்கு + பால்=கீழ்பால், கிழக்கு + திசை=கீழ்திசை எனவரும்.

இது சிலவேளைகளில் முற்கூறிய திரிபுகளடைந்த பின் னர் வலிமிகவும், ஐகாரச்சாரியை பெறலும், பெற்று வலி மிகலுமாம்.

(உ-ம்.) கீழ்த்திசை, கீழைவிடு, கீழைத்தடி எனவரும்.

**135.** தெற்கு என்பது 'மேற்கு', 'கிழக்கு' இவைகளோடும், பிறபெயரோடும் புணர்ந்தால் நிலைமொழியீற்றுயிர்மெய் கெட்டு றகரம் னகரமாகத் திரியும்.

(உ-ம்.) தெற்கு+மேற்கு=தென்மேற்கு, தெற்கு+கிழக்கு= தென்கிழக்கு, தெற்கு+நாடு=தென்னாடு, தெற்கு+மொழி=தென் மொழி எனவரும்.

**136.** மேற்கு என்பது பிறபெயர்களோடு புணரும்போது நிலைமொழியீறுகெட்டு றகரம் லகரமாதலும் இயல்புமாம்.

(உ-ம்.) மேற்கு+புறம்=மேல்புறம், மேற்புறம்; மேற்கு+ கடல்=மேல்கடல், மேற்கடல்; மேற்கு+ஊர்=மேற்கூர், மேலூர் எனவரும்.

இது சில வேளைகளில் முற்கூறியபடி றகரம் லகரமான பின்னர் ஐகாரச்சாரியை பெறலும், பெற்று வலிமிகலுமாம்.
(உ-ம்.) மேலைவயல், மேலைப்புலம் எனவரும்.

**137.** வடக்கு என்பது 'மேற்கு', 'கிழக்கு' என்னும் பெயர்களோடும், பிறபெயரோடும் புணரும்போது நிலைமொழி யீற்றுயிர்மெய்யும் ககரவொற்றுங் கெடும்.

(உ-ம்.) வடக்கு+மேற்கு = வடமேற்கு, வடக்கு+கிழக்கு= வடகிழக்கு, வடக்கு + மலை = வடமலை, வடக்கு+நாடு = வடநாடு எனவரும்.

**138.** ஒடு, ஓடு உருபின் முன்னும், அது உருபின் முன்னும் வலிமிகாது.

(உ-ம்.) அவனொடு+போனான்=அவனொடு போனான், அவனோடு சொன்னான், அவனது குதிரை.

**139.** விகாரப்பட்ட என்ன என்னும் வினுவின் முன் வலிமிகாது.

[இஃது எவன் என்னும் வினுவினைக் குறிப்பின் விகாரமாம். என், என்னை, ஏன் என்பவைகளும் அப்படியே.]

(உ-ம்.) என்ன + செய்தி = என்னசெய்தி, என்ன கொடுத்தான்.

**140.** இரண்டாம் வேற்றுமைத் தொகையின் முன் வலிமிகாது; விரியின்முன் மிகும்.

(உ-ம்.) புளி + தின்ருன் = புளிதின்ருன். நீர் + குடித்தான் = நீர்குடித்தான் எ-ம், புளியை + தின்ருன் = புளியைத் தின்ருன், நீரை + குடித்தான் = நீரைக்குடித்தான் எனவரும்.

**141.** இரண்டாம்வேற்றுமை யுருபும் பயனும் தொக்க தொகையில் வல்லொற்று மிகும்.

(உ-ம்.) குடுமி + பையன் = குடிமிப்பையன், தயிர் + குடம் = தயிர்க்குடம் எனவரும்.

**142.** உலகவழக்கிலே உயர்திணையில் இரண்டாம் வேற்றுமை விரிந்தேவரும்.

(உ-ம்.) தமையனை + கண்டான் = தமையனைக் கண்டான் எனவரும்.

**143.** வேற்றுமையில் ணகரமும், னகரமும் வல்லினம் வந்தால் டகர றகரங்களாம்; அல்வழியில் இயல்பாம்.

(உ-ம்.) மண் + குடம் = மட்குடம், பொன் + குடம் = பொற்குடம், மண்குறிது, பொன்குறிது எனவரும்.

**144.** தனிக்குறிலணையாத ணகரமும், னகரமும், வந்த நகரந் திரிந்தபோது கெடும்.

(உ-ம்.) தூண் + நன்று = தூணன்று, பசுமண் + நன்று = பசுமணன்று, கோன் + நல்லன் = கோனல்லன், செம்பொன் + நன்று = செம்பொனன்று எனவரும்.

145. வேற்றுமையில், லகர ளகரங்கள் வல்லினம் வந்தால் றகர டகரங்களாம்; அல்வழியில் இயல்பாம்.

(உ-ம்.) கல் + சட்டி = கற்சட்டி, முள் + குறை = முட்குறை, கல் + குறிது = கல்குறிது, முள் + குறிது = முள்குறிது.

146. லகர ளகரங்கள், இருவழியிலும் மெல்லெழுத்து வரின் னகர ணகரங்களாகத் திரியும்.

(உ-ம்.) கல் + மறைந்தது = கன்மறைந்தது, எள் + நெய் = எண்ணெய்.

147. அல்வழியில் தனிக் குற்றெழுத்தைச் சேராத லகர ளகரங்கள், வருமொழி முதலில் இருந்த தகரம் றகர டகரங்களாகத் திரியும்போது கெடும்.

(உ-ம்.) தோன்றல் + தீயன் = தோன்றறீயன், வேள் + தீயன் = வேடீயன் எனவரும்.

148. அல்வழியிலும் வேற்றுமையிலும் தனிக்குறிலைச் சாராத லகர ளகரங்கள், வருமொழிமுதல் நகரம் னகர ணகரங்களாகத் திரியும்போது கெடும்.

(உ-ம்.) தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன், வேள் = நல்லன் = வேணல்லன் எனவும், தோன்றல் + நன்மை = தோன்றனன்மை, வேள் + நன்மை = வேணன்மை எனவும் இருவழியிலும் வந்தமை காண்க.

149. னகர லகரங்களுக்கு முன், தகர நகரங்கள் வந்தால், அவை முறையே றகர னகரங்களாம்.

(உ-ம்.) பொன் + தீது = பொன்றீது, பொன் + நன்மை = பொன்னன்மை, கல் + தீது = கற்றீது, கல் + நன்று = கன்னன்று எனவரும்.

150. ணகர ளகரங்களுக்குமுன், தகர நகரங்கள் வந்தால் அவை முறையே டகர ணகரங்களாம்.

(உ-ம்.) மண் + தீது = மண்டீது, மண் + நன்று = மண்ணன்று, முள் + தீது = முட்டீது, முள் + நன்று = முண்ணன்று.

151. மகரம் அல்வழியில் வல்லினம் வந்தால் அதற்கினவெழுத்தாகத் திரியும்.

(உ-ம்.) மரம் + குறிது = மரங்குறிது, மரம் + சிறிது = மரஞ்சிறிது, மரம் + தீது = மரந்தீது.

152. மகரம் வேற்றுமையிலும் அல்வழியிலும் உயிரும் மெல்லினமும் இடையினமும் வந்தாற்கெடும்.

(உ-ம்.) வட்டம் + ஆழி = வட்டவாழி, வட்டம் + நேமி = வட்டநேமி, வட்டம் + வளை = வட்டவளை, எ-ம், மரம் + அடி = மரவடி, மரம் + நார் = மரநார், மரம் + வேர் = மரவேர், எ-ம், இருவழியிலும் வந்தன.

153. மகரங்கெடநின்ற மொழிக்குமுன் வலிவந்தால் வல்லெழுத்துத் தோன்றும்.

(உ-ம்.) குளம் + கரை = குளக்கரை.

154. எல்லாம் என்னுஞ் சொல் வேற்றுமையுருபை யேற்கும்போது, மகரங்கெட்டு இடையில் 'அற்று'ச்சாரியை தோன்றக் கடையில் உம்மை பெற்றுவரும்.

(உ-ம்.) எல்லாவற்றையும், எல்லாவற்றாலும்.

155. மகரவீற்றுச் சொல்லோடு, 'அத்து'ச்சாரியை புணரும்போது, மகரமும் சாரியையின் முதல் அகரமுங் கெடும்.

(உ-ம்.) மரம் + அத்து + குறை = மரத்துக்குறை.

156. அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், எ, ஐ, கு, ன், ஆம் இப்பன்னிரண்டும் பிறவுஞ் சாரியைகளாம்.

(உ-ம்.) உண்டனன், பசுவினெய், வளையல், எல்லாவற்றினும், பதிற்றுப்பத்து, மரத்துக்கிளை, புளியங்காய், கலனேகுறுணி, பண்டைநாள், உய்குவாய், கோன், மண்ணுங்கட்டி.

157. அஃறிணைப் பெயர் அன்மொழியாகியும் ஆகு பெயராகியும் உயர்திணையை யுணர்த்தின் வலி இயல்பாம்.

(உ-ம்.) பொற்றொடிகை, அரசுகை.

புணரியல் முற்றிற்று.

## ON NOUNS.

## பெயரியல்.

158. சொல்லென்பது, இருதிணை யைம்பாற் பொருள்களை மூன்றிடத்தும் வெளிப்படையாகவேனும் குறிப்பாகவேனும் உணர்த்துவது.

### Parts of Speech.

159. சொற்கள்—பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | மண், பெண் | ... ... | பெயர்ச்சொல். |
| | வா, போ | ... ... ... | வினைச்சொல். |
| | மற்று, பின் | ... ... ... | இடைச்சொல். |
| | சால, நனி | ... ... ... | உரிச்சொல். |

சொல்லுக்கும் பதத்திற்குமுள்ள பேதம் :—

சொல்லென்பது இருதிணையைம்பாற் பொருளுணர்க்கத்தாற் பெயர் வினை யிடை யுரி யெனப் பிரிக்கப்பட்டு வாக்கியங்களில் தொடர்புண்டு நிற்கும். பதமென்பது அவ்வாறன்றிப் பகுக்கப்படு நோக்கம் பற்றிப் பகுபதம் பகாப்பதமென இரு பிரிவினதாகித் தனித்து நிற்கும்.

(உ-ம்.) சாத்தன் வந்தான் என்ற வாக்கியத்திற் சாத்தன் பெயர்ச்சொல், வந்தான் வினைச்சொல். இவ்விரண்டுந் தனித்து நின்றபோது சாத்தன் பகாப்பதம், வந்தான் பகுபதம். இவ்விரண்டனியல்புகளையும் ஒருங்கே சேர்த்துக் கருதும்போது அவை முறையே பெயர்ப் பகாப்பதமும் வினைப்பகுபதமுமாம்.

160. தமிழுக்குரிய இந்நால்வகைச் சொற்களையுந் தவிர்த்துத் திசைச்சொல் வடசொல்லெனத் தமிழில் வந்து வழங்குஞ் சொற்கள் இருவகையாம்.

## Provincial Words.

**161.** தாயைத் தள்ளையென்பது, தந்தையை அச்சனென்பது முதலியன திசைச்சோல்.

செந்தமிழ் வழங்காத பிர நாடுகளிலிருந்துவந்து நம் தமிழில் வழங்குஞ் சொற்களைத் திசைச்சொல் என்பர்கள்.

## Sanskrit Words.

**162.** யானையைக் குஞ்சரமென்பது, முயற்சியைப் பிரயத்தன மென்பது முதலியன வடசோல்.

ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்துவந்து நம் தமிழில் வழங்குஞ் சொற்கள் வடசொற்களாம்.

இவை தற்சமம், தற்பவம் என விருவகைப்படும்.

ஸம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய இவ்விரு பாஷைகளுக்கும் பொதுவெழுத்துக்களா லெழுதப்பட்டுச் ஸம்ஸ்கிருத வுச்சரிப்பே பெற்றுவருவன தற்சமமாம்.

(உ-ம்.) கமலம், காரணம்.

ஸம்ஸ்கிருதமொழி தமிழ்ச் சிறப்பெழுத்தினாலேனும், பொதுவுஞ் சிறப்புமாகிய இரண்டுவித எழுத்துக்களினாலேனும் எழுதப்பட்டுத் தமிழ் உச்சரிப்பே பெற்றுவரின் அது தற்பவமாம்.

(உ-ம்.) சுத்தம், சலம்.

[இவை இந்நூல் 21-ம் பக்கத்திலுங் கூறப்பட்டிருக்கின்றன. அதனை யிங்கே கூறியவற்றோடும் ஒத்து நோக்குக.]

**163.** திணை—உயர்திணை, அஃறிணை யென இரண்டு வகைப்படும்.

திணை—குலம், சாதி ; உயர்வாகிய திணை உயர்திணை, அஃது அல்லாத திணை அஃறிணை.

(உ-ம்.) மனிதர், தேவர், நரகர்—உயர்திணை. விலங்கு, கல், மரம்—அஃறிணை.

164. மனிதருடைய உடம்பையும் உயிரையும் பிரித்தால் அவையும் அஃறிணையாம்.

## Gender.

165. ஆண், பெண், பலர், ஒன்று, பல எனப் பால ஐந்து.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | ஆண்பால் | ... | அவன், அரசன். |
| | பெண்பால் | ... | அவள், அரசி. |
| | பலர்பால் | ... | அவர், அரசர். |
| | ஒன்றன்பால் | ... | அது, பசு. |
| | பலவின்பால் | ... | அவை, பசுக்கள். |

166. உயர்திணைக்கு ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய இம்மூன்றும் உரியன.

167. அஃறிணைக்கு ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இவ்விரண்டும் உரியன.

168. கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவுஞ் சொல்லலாம்.

(உ-ம்.) சுவாமி வந்தார், சுவாமி வந்தது.

169. ஆணும் பெண்ணும் அல்லாத பேட்டை [அலியை] ஆணுறுப்பு மிகுந்திருந்தால் ஆணாகவும் பெண்ணுறுப்பு மிகுந்திருந்தாற் பெண்ணாகவும் சொல்லலாம். அப்பொழுது அது முறையே பேடன் எனவும் பேடி யெனவும் வரும்.

## Person.

170. தன்மை, முன்னிலை, படர்க்கையென இடம் மூன்று.

(உ-ம்.) தன்மை—நான், நாம், நாங்கள்.
முன்னிலை—நீ, நீர், நீங்கள்.
படர்க்கை—அவன், அவள், அவர், அது, அவை.

## Number.

171. எண்—ஒருமை, பன்மையென இரண்டுவகையாம்.

(உ-ம்.) அது, அரசன்; அவை, அரசர்.

## Common and Classical Words.

172. தமிழுக்குரிய நான்குவகைச் சொற்களில் உரிச்சொல்லெல்லாம் திரிசொல்லாதலின் அவை ஒழிய மற்றை மூன்றில் ஒவ்வொன்றும் இயற்சொல், திரிசொல்லென இருவகையாம்; எனவே அவை பெயரியற்சொல், பெயர்த்திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத்திரிசொல், உரித்திரிசொல் என எழுவகையாம்.

சில இலக்கணநூலார் கருத்தின்படி உரிச்சொற்களினும் இயற்சொல்லுண்டு.

(உ-ம்.) அன்பு, அழகு.

## Common Words.

173. இயற்சொல்லாவது இயற்கையாய் யாவருக்கும் எளிதிற் பொருள் விளங்கும் சொல்.

(உ-ம்.) மண், பொன், மரம் முதலியன பெயரியற்சொல்; வா, போ முதலியன வினையியற்சொல்; வீட்டை, வீட்டில் இவற்றில் ஐ-இல்-இடையியற்சொல்.

## Classical Words.

174. திரிசொல்லாவது ஒருபொருள் குறித்த பல சொல்லாகியும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் கற்றோராற் பொருளறியப்படுஞ் சொல்லாம்.

(உ-ம்.) கிள்ளை, சுகம், தத்தை—இவை கிளியென்கிற ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம்—இது யானை, கோழி, சங்கு முதலிய பலபொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்.

படர்ந்தான், ஏகினன், சென்றான்—இவை போயினனென ஒரு பொருள் குறித்த பலவினைத்திரிசொல்.

வரைந்தான்—இது நீக்கினன், கொண்டான், எழுதினன் என்கிற பலபொருள் குறித்த ஒரு வினைத்திரிசொல்.

இஃது இயற்சொல்லினின்றும் திரிந்த சொல்லாதலினிதைத் திரிசொல் என்றார்.

[இடைத்திரி சொல்லிற்கு உதாரணம் இடையியலிற் கண்டு கொள்க.]

### Usage.

175. வழக்கு, இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.

### Natural Usage.

176. இயல்பு வழக்கு என்பது ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லால் அப்பொருளைக் கூறுவது. அஃது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூன்றுவகைப்படும்.

### Grammatical Form.

177. இலக்கணமுடையது என்பது இலக்கண நெறியால் வருவது.

(உ-ம்.) நிலம், நீர்.

### Apparent Grammatical Form.

178. இலக்கணப்போலி என்பது இலக்கணத்திற்கு ஒத்திராவிட்டாலும் இலக்கணமுடையதுபோல வருவது

(உ-ம்.) இல்முன் என்பது முன்றில் எ-ம், நகர்ப்புறம் என்பது புறநகர் எ-ம், கடைப்புறம் என்பது புறங்கடை எ-ம், வரும்.

### Corrupt Form.

**179.** மரூஉ என்பது இலக்கணஞ் சிதைந்து சொல்லுருக்குலைந்து கலந்ததேனும் ஆன்றோர் ஆட்சிபெற்று வருவது.

(உ-ம்.) அருமருந்தன்ன பிள்ளை என்பது அருமந்த பிள்ளை எ-ம், ஆயிற்று என்பது ஆச்சு எ-ம், வரும்.

### Appropriate Usage.

**180.** தகுதிவழக்கு என்பது ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள சொல்லை ஒழித்துத் தகுதியாகிய வேறு சொல்லால் அப்பொருளைக் கூறுவது; அஃது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

### Decent Form.

**181.** இடக்கரடக்கல் என்பது சொல்லத் தகாததை மறைத்துச் சொல்வது.

(உ-ம்.) கால் கழுவிவந்தேன், பவ்வீ.

இவ்வாறு அடக்கிச் சொல்லாவிடின் அஃது அருவருப்புச்சுவை விளைக்கும்.

### Euphemistic Form.

**182.** மங்கலம் மங்கலமில்லாததை யொழித்து மங்கலமாகக் கூறுவது.

(உ-ம்.) நன்காடு, தாலி பெருகிற்று.

இவ்வாறு மறைத்துக் கூறுவிடின் அஃது அவலச்சுவை விளைக்கும்.

### Conventional Form.

**183.** குழூஉக்குறி என்பது ஒரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணத்தால் ஒரு பொருளினது சொற்குறியை

யொழித்து வேறொரு சொற்குறியால் அப்பொருளைக் கூறுவது.

(உ-ம்.) சொல்விளம்பி (கள்), பறி (பொன்)

184. சொல் பொருளை உணர்த்துமிடத்துக் குறிப்பும் வெளிப்படையுமென இருவகைப்படும்.

## Implied Words.

185. அவற்றுள், குறிப்பு:—ஒன்றொழிபொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக்குறிப்பு, முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு, பிறகுறிப்பு எனப் பலவாம்; இவைகளல்லாதன வெளிப்படையாம்.

(உ-ம்.) ஒன்றொழி பொதுச்சொல்—ஆயிரமக்கள் போர் செய்தார்கள்—இதில் 'மக்கள்' என்னும் பொதுப்பெயரும், 'செய்தார்கள்,' என்கிற பொதுவினையும், 'போர்' என்னுங் குறிப்பால் உயர்திணைப் பெண்பாலை யொழித்து ஆண்பாலைக் காட்டின.

விகாரம்—மரைமலர்—இதில் 'மரை' என்னுஞ் சொல் 'மலர்' என்னுங் குறிப்பால் தாமரையைக் காட்டிற்று. இது முதற்குறை யென்னும் விகாரம்.

தகுதி—திருமுகம் படித்தான்—இதிற் 'படித்தான்' என்னுங் குறிப்பால் 'திருமுகம்' என்னுஞ்சொல் ஓலையென்பதைக் காட்டிற்று.

ஆகுபெயர்—புளிதின்றான்—இதிற் 'புளி' யென்னுஞ் சொல் 'தின்றான்,' என்னுங் குறிப்பால் அதன் பழத்தைக் காட்டிற்று.

அன்மொழித்தொகை—தேன்மொழி சொன்னாள் — இதில் 'தேன்மொழி' யென்னும் சொற்றொடர் 'சொன்னாள்' என்னுங் குறிப்பால் தேன்போன்ற மொழியையுடைய பெண்ணைத் தெரிவித்தது.

வினைக்குறிப்பு—இவனிப்போது பொன்னன்—இதிற் 'பொன்னன்' என்னுஞ்சொல் 'இப்போது' என்னுங்குறிப்பாற் பெயர்ப்

பொருளை யொழித்துப் 'பொன்னையுடையவனுயிருக்கின்றான்' என்னும் வினைக்குறிப்பைக் காட்டிற்று.

முதற்குறிப்பு—ஆத்திசூடி படித்தான்—இதில் 'ஆத்திசூடி' யென்னுஞ் சொற்கள், 'படித்தான்' என்னுங் குறிப்பால் அந்தச் சொற்களை முதலிலுடைய நூலைக்காட்டின.

தொகைக்குறிப்பு—ஐவரோடு குந்திவந்தாள்—இதில் 'ஐவர்' என்னுஞ்சொல் 'குந்தி' யென்னுங் குறிப்பால், பாண்டவரைத்தெரிவித்தது.

பிற குறிப்பு—கல்லைக்கடிக்க நன்றாய்ச் சமைத்தாய், பாயா வேங்கை, பறவாக்கொக்கு—என்பனவற்றிற், 'கல்லைக்கடிக்க' என்னுங் குறிப்பால் நன்றாய்ச் சமைக்கவில்லை என்பதும் 'பாயா' 'பறவா' என்னுங் குறிப்பால் வேங்கை மரமென்பதும் கொக்குக் குதிரை யென்பதும் தெரிவிக்கப்பட்டன.

**186.** ஒருவன் ஒருத்தி என்கிற பெயரன்றி இரண்டு மூன்று முதலான எண்கள் காரணமாக ஆண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் வரமாட்டா.

**187.** ஒருவரென்கிற சொல் உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவிற் பன்மைவினையைக் கொள்ளும்.

(உ-ம்.) ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பார்; பெண்டிருள் ஒருவர் கொழுநன்வழி நிற்பார்.

**188.** து, வை, விகுதிகளைப் பெறாத அஃறிணைப் பெயர்களை அத்திணை இருபாலுக்கும் பொதுவாம். இஃது அஃறிணை யியர்பெயர் என்றும் பால்பகா வஃறிணைப்பெயர் என்றும் சொல்லப்படும்.

(உ-ம்.) குதிரை வந்தது, குதிரை வந்தன ; மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.

189. பெயர்கள் இயற்பெயர் என்றும் ஆகுபெயர் என்றும் இருவகைப்படும். இயற்பெயராவது ஒரு பொருளுக்கு இயல்பாகவுள்ள பெயராம்.

## Metonymy and Synecdoche.

190. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், நால்வகையான அளவு, சொல் தானி, கருவி, காரியம், கருத்தன் இவை முதலான பெயர்களுள் ஒரு பொருளின் இயற்பெயர் அப்பொருளுக்கிசைந்த பிறிதொரு பொருளுக்குப் பழையவழியால் ஆகிவருமாயின் ஆகுபெயராம். கருவியெனினும் காரணமெனினு மொக்கும்.

(உ-ம்.)

| | |
|---|---|
| தாமரைபோன்ற பாதம் ... | பொருளாகு பெயர். முதலாகுபெயரென்றும் சொல்லலாம். |
| ஊரடங்கிற்று ... ... | இடவாகுபெயர். |
| காரறுத்தது ... ... | காலவாகுபெயர். |
| வெற்றிலை நட்டான் ... ... | சினையாகுபெயர். |
| வெள்ளை வந்தது ... ... | குணவாகுபெயர். |
| வற்றலுண்டான் ... ... | தொழிலாகுபெயர். |
| காலாலே நடந்தான் ... ... | எண்ணலளவையாகுபெயர். |
| இப்புளிவீசை ... ... | எடுத்தலளவையாகுபெயர். |
| நாழியுடைந்தது ... ... | முகத்தலளவையாகுபெயர். |
| இந்த வீடு ஐம்பதடி ... ... | நீட்டலளவையாகுபெயர். |
| அவன் சொல்லையறிந்தான்... | சொல்லாகுபெயர். |
| விளக்கு ஒடிந்தது ... ... | தானியாகுபெயர். |
| திருவாசகம் ... ... | காரணவாகுபெயர். |
| இந்நூலலங்காரம் ... ... | காரியவாகுபெயர். |
| திருவள்ளுவர் படித்தான் ... | கர்த்தாவாகுபெயர். |
| வெற்றிலை நட்டான் ... .. | அடையடுத்தவாகுபெயர். |

## வேற்றுமை.—Cases.

**191.** பெயர், ஐ, ஆல், கு, இன், அது, இல், விளி என வேற்றுமை எட்டாம்.

### Nominative Case.

**192.** எழுவாய் வேற்றுமையாவது, ஐ முதல் ஆறுருபுகளை ஏற்றுத் திரிபில்லாமலிருக்கிற பெயரேயாம். இதனைப் பெயர்வேற்றுமை யென்பதும் உண்டு. இது வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ளவருதல் இதன் பொருளாம். இதை வினைமுதலென்றும், கர்த்தாவென்றும், செய்பவனென்றும் சொல்லலாம்.

(உ-ம்.) சாத்தன் வந்தான், பசு வொன்று, அவன் யார் ?

### Accusative Case.

**193.** இரண்டாம் வேற்றுமையின் உருபு, ஐ ஆகும். அதன் பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலியனவாம். இதனைச் செய்பொருள் வேற்றுமை யென்றுங் கருமவேற்றுமை யென்றுஞ் சொல்வதுண்டு.

(உ-ம்.) குடத்தைச் செய்தான் ... ஆக்கப்படுபொருள்.
வீட்டையிடித்தான் ... அழிக்கப்படுபொருள்.
ஊரையடைந்தான் ... அடையப்படுபொருள்.
மனைவியை விட்டான் ... நீக்கப்படுபொருள்.
புலியை யொத்தான் ... ஒக்கப்படுபொருள்.
பொன்னை யுடையான் ... உடைமைப்பொருள்.

### Instrumental Case.

**194.** மூன்றும் வேற்றுமையி னுருபு, ஆல், ஒடு, ஓடு என்பனவாம்; அவைகளின் பொருள் கருவிப் பொரு

ளும், கருத்தாப்பொருளும், உடனிகழ்ச்சிப்பொருளும் ஆம். இதனைக் கருவி வேற்றுமை யென்பதுமுண்டு.

(*a*) கருவி, முதற்கருவி, துணைக்கருவி என இரு வகைப்படும்.

முதற் கருவியாவது செய்யப்படுபொருளோடொற்றுமை யுடையதாய், செய்யப்படுபொருளுக்கின்றியமையாததாய், தானே செய்யப்படு பொருளாவதாயுள்ளது. துணைக் கருவியாவது முதற்கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையாயுடனின்று உதவுவது.

(உ-ம்.) மண்ணாற் செய்தகுடம் ... முதற்கருவி.
தண்டசக்கிரங்களாற்செய்தகுடம் ... துணைக்கருவி.

(*b*) கருத்தா—இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இருவகைப்படும்.

இயற்றுதற்கருத்தாவாவது கருவியைத் தொழிற்படுத்துவது. ஏவுதற்கருத்தாவாவது இயற்றுதற் கருத்தாவின்றொழிலை யுண்டாக்கும் தொழிலையுடையது.

(உ-ம்.) தச்சனலாகிய கோயில் ... இயற்றுதற்கருத்தா.
அரசனலாகிய கோயில் ... ஏவுதற்கருத்தா.

முதல் வேற்றுமைக் கருத்தாவிற்கும் மூன்றம் வேற்றுமைக் கருத்தாவிற்குமுள்ள வேறுபாடு :—

(1) முதல் வேற்றுமைக் கருத்தா தன் விகுதி வினைகொண்டு முடியும், மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப்படுபொருள் விகுதி வினைகொண்டு முடியும்.

(2) முதல்வேற்றுமைக் கருத்தா செய்வினைப் பிரயோகத்திலிருக்கும், (Active Voice); மூன்றும் வேற்று

மைக் கருத்தா செயப்பாட்டுவினைப் பிரயோகத்திலிருக்கும், (Passive Voice).

(*c*) உடனிகழ்ச்சிப்பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருளாம்.

(உ-ம்.) தகப்பனோடு மகன்வந்தான்...உடனிகழ்ச்சிப்பொருள்.

இதற்குத் 'தகப்பனும் வந்தான் மகனும் வந்தான்' என்பது பொருள்.

## Dative Case.

195. நான்காம் வேற்றுமையின் உருபு, கு ஆகும்; அதன் பொருள் கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலானவைகளாம். இதனைக் கொள்வோன் அல்லது கோளி வேற்றுமை யென்பது முண்டு.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | யாசகர்க்குப் பொன்னைக் கொடுத்தான் | ... கொடை. |
| | பாம்புக்குப் பகை கருடன் | ... பகை. |
| | சாத்தனுக்குச் சிநேகன் கொற்றன் | ... நேர்ச்சி. |
| | விலையுயர்ந்த ஆபரணம் அரசர்க்குரியது | ... தகுதி. |
| | கடுக்கனுக்குப் பொன் | ... அதுவாதல். |
| | கூலிக்கு வேலைசெய்தான் | ... பொருட்டு. |
| | அவனுக்கிவன் மகன் | ... முறை. |

## Ablative Case.

196. ஐந்தாம் வேற்றுமையினுடைய உருபு, இன், இல் என்பனவாம்; அவைகளின் பொருள் நீக்கப்பொருளும், ஒப்புப்பொருளும், எல்லைப்பொருளும், ஏதுப்பொருளுமாம். இதனை நீக்க வேற்றுமையென்பதுமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | மலையின் வீழருவி | ... | நீக்கப்பொருள். |
| | காக்கையிற்கரிது களம்பழம் | ... | ஒப்புப்பொருள். |
| | மதுரையின் வடக்குச் சிதம்பரம் | ... | எல்லைப்பொருள். |
| | கல்வியிற் பெரியவன் கம்பன் | ... | ஏதுப்பொருள். |

[இனியொப்புப்பொருளை உவமப்பொருவு, உறழ்பொருவு என இரண்டாக்குதலுமுண்டு. 'காக்கையிற் கரிது களம்பழம்' என்றபோது, 'காக்கையின்' என்பதற்குக் காக்கையைப்போல் என்பது பொருளாயின் உவமப்பொருவு என்றும், 'காக்கையைக் காட்டினும்' என்பது பொருளாயின் உழற்பொருவு என்றுங் கொள்க. எனவே ஏற்றந் தாழ்வு கருதுமிடத்து உழற்பொருவு கொள்ளப்படும். இதனை யெல்லைப்பொருளின்கண் அடக்குவாருமுளர்.]

## Genitive or Possessive Case.

**197.** ஆறும் வேற்றுமைக்கு உருபு, அது, உடைய என இரண்டாம். அவற்றின் பொருள் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவினீட்டம், திரிபினுக்கம் ஆகிய ஐந்து தற்கிழமைப்பொருளும், பொருள், இடம், காலம் என்கிற மூவகைப் பிறிதின்கிழமைப் பொருளுமாம். இதனை உடைமையல்லது குறைவேற்றுமை யென்பதுமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | சாத்தனது கருமை | ... | குணப்பண்புத்தற்கிழமை. |
| | சாத்தனது வரவு | ... | தொழிற்பண்புத்தற்கிழமை. |
| | சாத்தனது கை | ... | உறுப்புத்தற்கிழமை. |
| | மனிதரது கூட்டம் | ... | ஒன்றன்கூட்டத்தற்கிழமை. |
| | படைகளது தொகுதி | ... | பலவினீட்டத்தற்கிழமை. |
| | நெல்லினது பொரி | ... | திரிபினுக்கத்தற்கிழமை. |
| | சாத்தனது பசு | ... | பொருட்பிறிதின்கிழமை. |
| | சாத்தனது வீடு | ... | இடப்பிறிதின்கிழமை. |
| | சாத்தனது நாள் | ... | காலப்பிறிதின்கிழமை. |

இதுவன்றி, எனதுயிர் என உடைமையும் உடைய தும் வேறாகாத ஒற்றுமைப் பொருளிலும் வரும்; இஃது ஒற்றுமைத்தற்கிழமை.

## Locative Case.

**198.** ஏழாம்வேற்றுமையின் உருபு, இல், கண் முத லானவைகளாம்; அவ்வுருபின் பொருள், பொருள் முத லாகிய ஆறும், தற்கிழமை, பிறிதின்கிழமை இவ்விரண்டிற் கும் இடமாய் நிற்றலாம். இஃது இடவேற்றுமையென் னப்படும்.

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| மணியில் ஒளி | ... தற்கிழமை | பொருள் இட |
| பனையில் அன்றில் | ... பிறிதின்கிழமை | மாயிற்று. |
| ஊரில் வீடு | ... தற்கிழமை | இடம் இட |
| ஆகாயத்திற் பருந்து | ... பிறிதின்கிழமை | மாயிற்று. |
| நாளில் நாழிகை | ... தற்கிழமை | காலம் இட |
| சித்திரையிற் பாதிரி பூத்தது | ... பிறிதின்கிழமை | மாயிற்று. |
| கையில் விரல் | ... தற்கிழமை | உறுப்பு இட |
| கையில் மோதிரம் | ... பிறிதின்கிழமை | மாயிற்று. |
| கறுப்பில் அழகு | ... தற்கிழமை | பண்பு இட |
| இளமையிற் செல்வம் | ... பிறிதின்கிழமை | மாயிற்று. |
| ஆட்டத்தில் அபிநயம் | ... தற்கிழமை | தொழில் இட |
| ஆட்டத்திற் பாட்டு | ... பிறிதின்கிழமை | மாயிற்று. |

ஏழாம் வேற்றுமை யிடப்பொருளுருபெல்லாம் சமயம் நேர்ந்துழிக் காலப்பொருள் பயப்பனவாகவுங் கொள்ளப் படும்.

(உ-ம்.) இராமன் படிக்கையிற் கொற்றன் சென்றான். இங்கே 'படிக்கையில்' என்பதற்குப் 'படிக்கும்போது' என்பது பொருள்.

## Vocative Case.

**199.** எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகள், விளியடைந்த பெயரினுடைய ஈறு திரிதலும், கெடுதலும்,

மிகுதலும், ஈற்றய லெழுத்துத் திரிதலும், இயல்பாதலும் முதலியவைகளாம். இவற்றின் பொருள் படர்க்கைப்பொருளை முன்னிலையாக அழைத்தலாம். இதனை விளிவேற்றுமையென்பதே வழக்கு.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | அம்மை-அம்மா | ... | ஈறுதிரிதல். |
| | அரசன்-அரச | ... | ஈறுகெடுதல். |
| | மகன்-மகனே | ... | மிகுதல். |
| | மக்கள்-மக்காள் | ... | ஈற்றயலெழுத்துத்திரிதல். |
| | தம்பி | ... | இயல்பு. |

**200.** ஐகாரத்தை இறுதியிலுடைய பொதுப்பெயரின் ஈறு, ஆ, ஆய் என்று திரியும்.

(உ-ம்.) அன்னை - அன்னா ; பிள்ளை - பிள்ளாய் என வருதல் காண்க.

சில விடங்களில் இவ் ஐகாரங்கள் ஏகாரங்களாகத் திரிதலுமுண்டு.

(உ-ம்.) அன்னை - அன்னே.

**201.** உயர்திணை அஃறிணைப் பெயர்களி னீற்றைகாரம் ஆய் எனத்திரியும்.

(உ-ம்.) நங்கை - நங்காய், நாரை - நாராய்.

இவ்வைகாரமும் ஏகாரமாகத் திரிதலுமுண்டு.

**202.** னகரவீற்றுப்பெயர், ஈறுகெடுதலும், ஈறுகெட்டு அயல் நீளுதலும், அதனோடு ஓகாரமிகுதலும், ஏகாரமிகுதலும், இயல்பாதலும், அதனோடு ஏகாரமிகுதலும், ஈறுகெட்டு அயலகரம் ஏகாரமாதலும், விளியுருபாம்.

(உ-ம்.) அப்ப, அப்பா, அப்பாவோ, ஐயாவே, அப்பன், அப்பனே, ஐயே.

203. * அண்மை விளியில் இயல்பும், ஈறு கெடுதலும் † சேய்மை விளியில் ஈறு நீளுதலும், ஈறு கெட்டு அயல் நீளுதலும், உருபாம்.

(உ-ம்.) தம்பி, அப்ப ... ... அண்மைவிளி.
தம்பீ, அப்பா ... ... சேய்மைவிளி.

204. தன்மை முன்னிலைப் பெயர்களும், சுட்டுப்பெயரும், வினைப்பெயரும், தான், தாம் என்னும் பொதுப்பெயரும் விளிக்கப்படாவாம்.

205. ஐ முதலிய ஆறுருபுகளையும் ஏற்கும்போது தான், தாம் என்னும் படர்க்கைப்பெயர்கள் தன், தம் எனவும்; யான், யாம், நாம் என்னும் தன்மைப் பெயர்கள் என், எம், நம் எனவும்; நீ, நீர் என்னும் முன்னிலைப் பெயர்கள் நின், உன், நும், உம் எனவும் முறையே விகாரப்பட்டுக் குவ்வுருபு ஒன்றற்கு மாத்திரம் அகரச்சாரியை பெற்று வரும்.

(உ-ம்.) தன்னை, தன்னால், தனக்கு, தன்னின், தனது, தன்னில் எ-ம், தம்மை, தமக்கு எ-ம், என்னை, எனக்கு, எம்மை, எமக்கு, நம்மை, நமக்கு எ-ம், நும்மை, நுமக்கு எ-ம், வரும்.

206. நான் என்பது எழுவாய், ஒன்றையே ஏற்கும்.

(உ-ம்.) நான் கண்டேன்.

207. எல்லைப்பொருளில் வரும் இன்னுருபும் ஆறும் வேற்றுமை உருபும் பெயரையும், இவையல்லாத வேற்றுமைகள் வினையையும் நான்காம் உருபும், ஏழாம் உருபும் வினையோடு பொருந்திவரும் பெயரையும் கொண்டுமுடியும்.

---

* அண்மை=ஸமீபம். † சேய்மை=தூரம்.

(உ-ம்.) சென்னையின் வடக்குத் திருவொற்றியூர், அவனது கை எ-ம், பசுவந்தது, வீட்டைச்கட்டினுன், பிரம்பாலடித்தான், அவனுக்குக் கொடுத்தான், ஊரின் நீங்கினுன், பாயிற்படுத்தான், மயிலேவா எ-ம், நோய்க்குக்கொடுக்குமருந்து, மலையிலுள்ள மருந்து எ-ம், வரும்.

ஆறும்வேற்றுமைகள் எட்டாம்வேற்றுமையும் ஒழிந்த மற்றை வேற்றுமைகள் வினைகொண்டு முடியிற் காரகம் என்னப்படும்.

(உ-ம்.)

வீட்டையிடித்தான் : இரண்டாம்வேற்றுமைக் காரகம். வாளால் வெட்டினுன் : மூன்றும்வேற்றுமைக் காரகம். அரசனுக்குக் கொடுத்தான் : நான்காம்வேற்றுமைக் காரகம். மலையினின் றிறங்கினுன் : ஐந்தாம்வேற்றுமைக் காரகம். காட்டின்கட் சென்றுன் : ஏழாம் வேற்றுமைக் காரகம். இவை தனித்துவந்த காரகங்கள்.

'இந்திரன் றுமரையைக் கரத்தாற் கொய்திறைவனுக்குத் தந் திருங் குற்றத்தி னீங்கிவிண்மேலிருந்தான்': இஃது ஒருங்கேவந்த காரகம்.

பெயரியல் முற்றிற்று.



## ON VERBS.

## வினையியல்.

208. வினைச்சொல் பொருளின் புடைபெயர்ச்சியாகிய தொழிலை யுணர்த்துவதாம்.

### Transitive Verbs.

209. அது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் இந்த ஆறினையுங் காட்டும். இது செயப்படுபொருட்குன்ற வினையாம்.

(உ-ம்.) வனைந்தானென்றபோது, குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்கருவியும், தண்டமுஞ் சிரிகையுமாகிய துணைக்கருவிகளும், வனைதற்கு ஆதாரமாகிய இடமும், வனைதலாகிய செயலும் இறந்தகாலமும், குடமாகிய செயப்படுபொருளும் ஆகிய இவ்வாறினையுங் கொடுத்தது காண்க.

### Intransitive Verbs.

210. செயப்படுபொருட் குன்றிய வினையாயின் அஃது ஒழிந்த ஐந்து பகுப்பையே காட்டும்.

(உ-ம்.) இருந்தான், அது செயப்படு பொருளொழிந்த மற்றைய வைந்தையுந் தருதல் காண்க.

211. முற்று வினைச்சொல்லிற் பகுதியாற் செயலும், இடைநிலை முதலியவற்றாற் காலமும், விகுதியாற் செய்பவனும், எச்சவினைச்சொல்லிற் பகுதியாற்செயலும், இடைநிலை முதலியவற்றாற் காலமும் வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவும் வரும்.

(உ-ம்.) உண்டான், உண்டு, உண்ட.

212. வினை—தெரிநிலை, குறிப்பு என இரண்டு வகைப் படும்.

## Definite Verbs.

**213.** தெரிநிலை வினை—செயலும், காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்பது.

(உ-ம்.) வந்தான்.

**214.** தெரிநிலை வினை—தன்வினை, பிறவினை எனவும்; செயப்படுபொருட் குன்றியவினை, செயப்படுபொருட் குன்றாவினை யெனவும்; செய்வினை, செயப்பாட்டுவினை எனவும் அறுவகைப்படும்.

**215.** தன்வினை முதலிய அறுவகை வினையில் ஒவ்வொன்றும் முதனிலை, தொழிற்பெயர், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் என ஐந்து வகைப்படும். எனவே தெரிநிலைவினை விகற்பம் முப்பதாதல் காண்க.

(உ-ம்.)

தன்வினை—உண், உண்ணல், உண்டான், உண்டு, உண்ட.

பிறவினை—உண்பி, உண்பித்தல், உண்பித்தான், உண்பித்து, உண்பித்த.

செயப்படுபொருட் குன்றியவினை—நட, நடத்தல், நடந்தான், நடந்து, நடந்த.

செயப்படுபொருட் குன்றாவினை—தன்வினைக்குக் கொடுத்த வுதாரணங்களே.

செய்வினை—தன்வினை யுதாரணங்களே.

செயப்பாட்டு வினை—உண்ணப்படு, உண்ணப்படல், உண்ணப்பட்டது, உண்ணப்பட்டு, உண்ணப்பட்ட.

**216.** முதனிலை முதலாக மேற்சொல்லிய வினையின் பகுப்பு ஐந்தனுள் முதனிலை ஒழிந்த மற்றைய நான்கும்

உடன்பாடும், எதிர்மறையும் என இரண்டிரண்டு வகைப் படும். [எனவே உடன்பாட்டுத தெரிநிலை இருபத்து நான் கும் எதிர்மறைத்தெரிநிலை இருபத்துநான்குமாக 48-ஆதல் காண்க.

(உ-ம்.) தன்வினை உடன்பாடு—உண்ணல், உண்டான், உண்டு, உண்ட.

தன்வினை எதிர்மறை—உண்ணாமை, உண்ணான், உண்ணாமல், உண்ணாத.

பிறவினை உடன்பாடு—உண்பித்தல், உண்பித்தான், உண்பித்து, உண்பித்த.

பிறவினை யெதிர்மறை—உண்பியாமை, உண்பியான், உண்பியாமல், உண்பியாத.

மற்றைய உதாரணங்களும் இவ்வாறே வருமாறு காண்க.

## Active Verbs.

217. தன்வினை, பிறவினை, செயப்படுபொருட்குன்றிய வினை, செயப்படுபொருட் குன்றாவினை இந்நான்கும் செய் வினையேயாம்.

## Passive Verbs.

218. செயப்படுபொருட் குன்றியவினை, ஒழிந்த மற் றைய மூவகை வினைப்பகுதியோடு இடையே அகரச்சாரியை வரப் படு விகுதி சேர்ந்தாற் செயப்பாட்டு வினையாம்.

(உ-ம்.) தன்வினை உடன்பாடு—உண்ணப்படு, உண்ணப்படு தல், உண்ணப்பட்டான், உண்ணப்பட்டு, உண்ணப்பட்ட.

தன்வினை எதிர்மறை—உண்ணப்படாமை, உண்ணப்படான், உண்ணப்படாமல், உண்ணப்படாத.

பிறவினை உடன்பாடு—உண்பிக்கப்படு, உண்பிக்கப்படுதல், உண்பிக்கப்பட்டான், உண்பிக்கப்பட்டு, உண்பிக்கப்பட்ட.

பிறவினை எதிர்மறை—உண்பிக்கப்படாமை, உண்பிக்கப்படான், உண்பிக்கப்படாமல், உண்பிக்கப்படாத.

மற்றவைகளையும் இவ்வாறே காண்க.

**219.** சில வினைச்சொற்கள் பொதுவினையாக வரும்.

(*a*) தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை.

(உ-ம்.) தேற்றிக்கொடுத்தான்.

(*b*) செய்பொருட் குன்றிய வினைக்கும் செய்பொருட் குன்றா வினைக்கும் பொதுவினை.

(உ-ம்.) வெளுத்தான்.

(*c*) விதிவினைக்கும் மறைவினைக்கும் பொதுவினை.

(உ-ம்.) செய்யாய்.

(*d*) செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை.

(உ-ம்.) விண்டகமலம், விண்டகாய்.

## முற்றுவினை.—Finite Verbs.

**220.** அன், ஆன் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடையவினைகள் உயர்திணை யாண்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.) நடந்தனன், நடந்தான்—தெரிநிலை.
குழையன், குழையான்—குறிப்பு.

**221.** அள், ஆள் என்னும் இரண்டு விகுதிகளையும் இறுதியிலுடைய வினைகள் உயர்திணைப் பெண்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.) நடந்தனள், நடந்தாள்—தெரிநிலை.
குழையள், குழையாள்—குறிப்பு.

222. அர், ஆர் இவ்விரு விகுதிகளையும் ஈற்றிலுடைய வினைகள் உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.) நடந்தனர், நடந்தார்—தெரிநிலை.
குழையர், குழையார்—குறிப்பு.

223. து, று இவ்விரு விகுதிகளை இறுதியிலுடைய வினைகள் அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.) வந்தது, ஆயிற்று—தெரிநிலை.
குழையது, அற்று—குறிப்பு.

224. அ, இவ்விகுதியை இறுதியிலுடைய வினைகள் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.

(உ-ம்.) வந்தன—தெரிநிலை. புதியன—குறிப்பு.

225. ஆகாரவிகுதி அஃறிணைப் படர்க்கைப் பன்மை எதிர்மறை வினைமுற்றிறுதியில் வரும்.

(உ-ம்.) நடவா, செய்யா.

226. தன்மை வினைமுற்றும், முன்னிலை வினைமுற்றும், ஏவல் வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றும், வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்களும், வினையெச்சமும், பெயரெச்சமும் இருதிணைக்கும் பொதுவாம்.

227. என் விகுதி தன்மை யொருமைத் தெரிநிலை வினைமுற்றுக்கும் குறிப்பு வினைமுற்றுக்கும் வரும்.

(உ-ம்.) நடந்தேன், குழையேன் எனவரும்.

228. ஓம் விகுதி தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றிலும், குறிப்பு முற்றிலும் வரும்.

(உ-ம்.) நடப்போம், தாரிேனும்.

**229.** எம், ஆம் இவ்விரு விகுதிகளும் செய்யுளில் தன்மைப் பன்மை வினைமுற்றைக் காட்டவரும்.

(உ-ம்.) வந்தேம், வந்தாம், தாரினேம், தாரினும்.

**230.** ஐ, ஆய் இவ்விரு விகுதிகளும் முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுக்கும், குறிப்புமுற்றுக்கும் வரும்.

(உ-ம்.) நடந்தனை, நடந்தாய், குறியை, குறியாய் எனவரும்.

**231.** ஈர் விகுதி முன்னிலைப்பன்மைத் தெரிநிலை வினைமுற்றுக்கும், குறிப்பு முற்றுக்கும் வரும்.

(உ-ம்.) வந்தீர், குழையீர்.

**232.** தன்மையோடு முன்னிலையையாவது, படர்க்கையையாவது, அவ்விரண்டையுமாவது சேர்த்து ஒருவினைகொண்டு முடிக்கும்போது ஓம் விகுதியால் முடிக்க.

(உ-ம்.) நானும் நீயும் போனோம், நானும் அவனும் போனோம், நானும் நீயும் அவனும் போனோம் எனவரும்.

**233.** முன்னிலையோடு படர்க்கையைச் சேர்த்து முடிக்கும்போது முன்னிலைக்குரிய ஈர் விகுதியாய் முடிக்க.

(உ-ம்.) நீயும் அவனும் போனீர் எனவரும்.

**234.** ஆய், இ விகுதிகள் ஏவலொருமைக்கும், உம், ஈர், மின் அதன் பன்மைக்கும், எதிர்காலத்தை உணர்த்தி வரும்.

(உ-ம்.) உண்ணாய், செய்தி, உண்ணும், உண்ணீர், உண்மின் எனவரும்.

**235.** ஏவலொருமையில் விகுதி குன்றியும் வரும்.

(உ-ம்.) உண், காண், பார்.

236. க, இ எதிர்காலங்காட்டும் இவ்விரண்டு விகுதிகளையும் ஈற்றிலுடைய வினைமுற்று வியங்கோள் வினைமுற்றும்; அது மூன்றிடத்தும் ஐம்பாலிலுஞ் செல்லும்.

(உ-ம்.) யான் வாழ்க, யாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, யான்வாழி, யாம்வாழி, நீவாழி, நீர்வாழி, அவன்வாழி, அவள்வாழி, அவர்வாழி, அதுவாழி, அவைவாழி எனவரும்.

237. உயர்திணைச் சொல்லையும் அஃறிணைச் சொல்லையும் எண்ணி, ஒருவினைக்கொண்டு முடிக்கும்போது, உயர்திணைப் பலர்பால் வினைமுற்றைக்கொண்டு முடிக்க.

(உ-ம்.) சாத்தனும் குதிரையும் போனார்கள்.

238. உயர்திணைத் தன்மைச்சொல்லோடு அஃறிணையைக்கொண்டு முடிக்குங்கால், தன்மைப் பன்மை வினைமுற்றால் முடிக்க.

(உ-ம்.) நானும் குதிரையும் போனோம்.

239. முன்னிலைச்சொல்லோடு அஃறிணையை எண்ணி முடிக்குங்கால், முன்னிலைப்பன்மை வினைமுற்றால் முடிக்க.

(உ-ம்.) நீயும் குதிரையும் போனீர்கள்.

## எச்சவினை.—Incomplete Verbs.

240. அகர விகுதியையும், காலங்காட்டும் உம் விகுதியையும் ஈற்றிலுடையதாய்க் காலமும் செயலும் தோற்றிப் பாலுடனே செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்கிற ஆறும் ஒழிய நிற்பது பெயரெச்சமாம்.

(உ-ம்.) உண்ட / உண்கின்ற / உண்ணும் } சாத்தன்—செய்பவன்.

உண்ட
உண்கின்ற } கலம்—கருவி.
உண்ணும்

உண்ட
உண்கின்ற } வீடு—நிலம்.
உண்ணும்

உண்ட
உண்கின்ற } தொழில்—செயல்.
உண்ணும்

உண்ட
உண்கின்ற } பகல்—காலம்.
உண்ணும்

உண்ட
உண்கின்ற } சோறு—செயப்படுபொருள்.
உண்ணும்

241. செய்யுமென்னும் பெயரெச்சமே படர்க்கை முற்றுவினையும் ஆம்.

(உ-ம்.) மழை வரும்.

242. செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கும் செய்யுமென்னும் வினைமுற்றிற்கும் இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலுமுண்டு.

(உ-ம்.) சாவுங்குதிரை = சாங்குதிரை, குணமாகும் = குணமாம்.

243. செய்யுமென்னும் ஏவற்பன்மை வினைமுற்றிறுதி யுயிர்மெய்யுங் கெட்டுவரும்.

(உ-ம்.) போம் பெரியோரே.

244. செய்து, செய, செயின் என்னும் வாய்பாட்டை அடைந்து உ விகுதியையும், காலங் காட்டுவனவாகிய இ, ய், அ, கு, இன், ஆல், கால் இவ்வேழு விகுதிகளை

யும் ஈற்றில் உடைத்தாய்த் தொழிலையும் காலத்தையுந் தோற்றிப் பாலுடனேகொண்டு முடியும் வினையொழிந்து நிற்பது வினையெச்சமாம்.

(உ-ம்.) வந்து, ஓடி, போய்: இவை செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

உண்ண, உண்ணற்கு: இவை செயவென்னும் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சம்.

உண்ணின், உண்டால், உண்டக்கால்: இவை செயின் என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்.

245. செய்தென்னும் வினையெச்சம் தன்வினை முதல் வினையைக்கொண்டு முடியும்.

(உ-ம்.) உண்டு வந்தான்.

246. செயவென்னும் வினையெச்சமும் செயினென்னும் வினையெச்சமும், தன் வினைமுதல் வினையையும், வேறு வினைமுதல் வினையையுங்கொண்டு முடியும்.

(உ-ம்.) அவனுண்ண வந்தான்—தன்வினை முதல்வினையைக் கொண்டு முடிந்தது.

அவன் வரப்பார்த்தேன்—வேறுவினை முதல்வினையைக்கொண்டு முடிந்தது.

அவனுண்டால் வருவான்—தன்வினை முடிவு.

அவனுண்டாற் போவேன்—வேறுவினை முடிவு.

247. செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்தாலும் அதன் பொருள் திரியாது.

(உ-ம்.) நான் வந்து பொன்னன் போனான் என்பதற்கு நான் வரப் பொன்னன் போனான் என்பது பொருள்.

248. செய்யுமென்னும் முற்று உயர்திணைப் படர்க்கை யொருமைக்கும் அஃறிணைப் படர்க்கை யொருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் வரும்.

(உ-ம்.) அவன் நடக்கும், அவள் நடக்கும், அது வரும், அவை வரும்.

அவன் நடக்கும்=அவன் நடப்பான்.
அவள் நடக்கும்=அவள் நடப்பாள்.

## குறிப்புவினை.—Indefinite Verbs.

249. பொருளாதியாறும் அடியாகப் பிறந்த பெயர்கள் வினைகொண்டு முடியுஞ் சொற்களுக்குப் பயனிலையாக நின்று குறிப்பாகக் காலத்தைக் கொள்ளுமானால் அவை குறிப்பு வினையாம்.

(உ-ம்.) சாத்தான் உடையான், பொன்னையுடையான், அறிவாற் பெரியன், உனக்குள்ளான், உருவத்திற் சிறியன், காதிற் குழையன், எ-ம் ; வந்துபொன்னன், செய்தால் உரியன், முன்பு பொன்னன், இன்று பொன்னன், இனிப்பொன்னன், எ-ம் ; வரும்.

250. அ, இய இவ்விருவிகுதிகளும் பண்படி புணர்ந்து முடிவது, குறிப்புப் பெயரேச்சமாம்.

(உ-ம்.) செய்யகுதிரை, உள்ளமனிதன், கரிய மால், வலிய குதிரை.

251. பண்படியாகத்தோன்றி அகர ஈறாக நின்று வினையைக்கொண்டு முடிவது குறிப்பு வினையெச்சமாம்.

(உ-ம்.) மெல்லப் போனான், பையச் சென்றான், வலியச் சொன்னான்.

252. இல் என்னும் எதிர்மறைப் பண்படியோடு ஐ விகுதி புணர்ந்த வினைமுற்றும், உள் என்னும் உடன்பாட்டுப் பண்படியோடு டுவ்விகுதி புணர்ந்த வினைமுற்றும் இருதிணை யைம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய வினைமுற்றாம்.

(உ-ம்.) அவன், அவள், அவர், அது, அவை, நான், நாம், நீ, நீர், இல்லை.

இவை எதிர்மறைப் பொதுவினைக் குறிப்பு முற்றுக்கள்.
அவன், அவள், அவர், அது, அவை, நான், நாம், நீ, நீர், உண்டு.
இவை உடன்பாட்டுப் பொதுவினைக் குறிப்பு முற்றுக்கள்.

இனி, வேறு, இல்லை, உண்டு, யார், வேண்டும், தகும், படும் வியங்கோளாகிய எட்டும் இருதிணை யைம்பால்களுக்கும் பொதுவாகிய வினைமுற்றும்.

253. இல், உள் என்னும் பண்படிகளோடு மூன்றிடத்துக்கும் ஐம்பாற்கும் உரிய விகுதிகள் புணர்ந்தால் முறையே எதிர்மறைச் சிறப்பு வினைமுற்றும், உடன்பாட்டுச் சிறப்பு வினைமுற்றுமாம்.

(உ-ம்.) அவன் இலன், அவள் இலள், அவர் இலர், அஃது இன்று; அவை இல; நான் இலேன், நாம் இலோம்; நீ இலாய், நீர் இலீர் எனவும்.

அவன் உளன், அவள் உளள், அவர் உளர், அஃது உளது, அவை உள; நான் உளேன், நாம் உளோம், நீ உளாய், நீர் உளீர் எனவும் வரும்.

அல் என்பது எப்பொழுதும் இருதிணை யைம்பால் மூவிடங்களுக்கும் உரிய விதிகளோடு புணர்ந்து எதிர் மறைச் சிறப்புவினைமுற்றாகவே வரும்.

(உ-ம்.) அவன் அல்லன், அவள் அல்லள், அஃது அன்று, அவை யல்ல, நான் அல்லேன், நாம் அல்லோம். நீ யல்லை, நீர் அல்லீர்.

254. குறிப்பில் இன்மையும் அன்மையும் என எதிர் மறை இருவகைப்படும்.

255. இன்மை: என்றும் இல்லாமையைச் சொல்லுதல்; அன்மை: ஒருபொருளை மறுத்து அதற்கினமானதைச் சொல்லுதல்.

(உ-ம்.) அஃது இல்லை, அக்து அன்று என வரும்.

256. அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படிகள், ஆகாரச்சாரியை இடையிற்பெற்று, மல், மை, மே, து இவ் விகுதியைப் புணர்ந்தும் சாரியையில்லாமல் றிவ்விகுதியைப் புணர்ந்தும் வந்தால், எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங் களாம்.

(உ-ம்.) அல்லாமல், இல்லாமல், அல்லாமை, இல்லாமை, அல்லாமே, இல்லாமே, அல்லாது, இல்லாது, அன்றி, இன்றி, வந் தான் எனவரும்.

257. அல், இல் என்பவை இடையில் ஆகாரச் சாரி யையும், தகரவொற்று எழுத்துப்பேறும் பெற்று, அதன் மேல் அகரவிகுதியைப் புணரின் எதிர்மறைக் குறிப்புப் பெய ரெச்சமாம்.

(உ-ம்.) அல்லாத, இல்லாத குதிரை.

258. நடமுதலிய பகுதிகள் எதிர்மறை ஆகாரவிகுதி பெற்று யாவும் ஒரு பகுதியாய் நின்று, மல், மே, து விகுதி களைப் புணர்ந்தால் எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சமாம்.

(உ-ம்.) நடவாமல், நடவாமே, நடவாது வந்தான்.

259. நடமுதலிய பகுதிகள் எதிர்மறை யாகாரவிகுதி யைப்பெற்று, இரண்டும் ஒரு பகுதியாகித் தகரவெழுத்துப் பேற்றோடு சேர்ந்த அகர விகுதியைப் புணர்ந்தால் எதிர் மறைத் தெரிநிலைப் பெயரெச்சமாம்.

(உ-ம்.) நடவாத குதிரை எனவரும்.

260. எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமும், எதிர் மறைத் தெரிநிலைப் பெயரெச்சமும், எழுத்துப்பேற்றோடு

அகரவிகுதி குன்றியும் வரும். இஃது ஈறுகெட்ட எதிர் மறை பெயரேச்சம் என்னப்படும்.

(உ-ம்.) இல்லாக் குதிரை, உண்ணுக் குதிரை எனவரும்.

**261.** ஓர் எழுவாயோடு இரண்டு வினைமுற்று இயைந் தால் முதலில் இருக்கும் வினைமுற்றை வினையெச்சமாக்கிக் கொள். இதற்கு முற்றெச்சம் என்று பெயர்.

(உ-ம்.) சாத்தன் உண்டான் போனன்=சாத்தன் உண்டு போனன்.

ஒரே பெயரோடு இரண்டு மூன்று பெயரெச்சங்கள் இயைந்தால் முதலிலுள்ள பெயரெச்சங்களையெல்லாம் வினை யெச்சமாக்கிக்கொள்க.

(உ-ம்.) வந்த உண்ட போன சாத்தன் = வந்து உண்டுபோன சாத்தன்.

**262.** நடந்தான் முதலிய உடன்பாட்டு வினைமுற்று எதிர்மறைக் குறிப்புப் பொதுவினை முற்றோ டாயினும், எதிர்மறைக் குறிப்புச் சிறப்பு வினைமுற்றோடாயினும் சேர்ந் தால் எதிர்மறையையே காட்டும்.

(உ-ம்.) நடந்தானில்லை, நடந்தானிலன், நடந்தானல்லன். நடந்தாயில்லை, நடந்தாயிலாய், நடந்தாயல்லை. } என வரும்.

**263.** நடந்து என்னும் வினையெச்சத்தோடும், நடக் கின்று என்னும் நிகழ்கால இடைநிலையோடு சேர்ந்த பகுதி யோடும், நடக்கும் என்னும் குச்சாரியை சேர்ந்து பகுதியோ டும், எதிர்மறைக் குறிப்புச் சிறப்பு வினைமுற்றுச் சேர்ந்து முக்காலத்தையும் முறையே காட்டும்.

(உ-ம்.) நடந்திலன், நடக்கின்றிலன், நடக்கிலன் எனவரும்.

வினையியல் முற்றிற்று.

## MISCELLANEOUS RULES.

## பொதுவியல்.

264. இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச் சொற்களும் அப்படிப்பட்ட வினைச் சொற்களும், ஆண்பால் பெண்பால்களுள் ஒன்றைக் குறிப்பால் ஒழிக்கும்.

(உ-ம்.) ஆயிரமக்கள் போர்செய்யப்போயினர்—இதில் 'மக்க' ளென்னும் உயர்திணை இருபாலுக்குமுரிய பொதுப்பெயரும், 'போயினர்' என்னும் பொதுவினையும், 'போர்செய்ய' என்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன.

பெருந்தேவி கருவுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுளர்,—இதில் 'மக்கள்' என்னும் பொதுப்பெயரும், 'உளர்' என்னும் பொதுவினையும், 'கருவுயிர்த்த' என்னும் குறிப்பினால் உயர்திணையாண்பாலை யொழித்தன.

இப்பெற்றம் உழவொழிந்தன—இதிற் 'பெற்றம்' என்னும் அஃறிணைப் பொதுப்பெயரும், 'ஒழிந்தன' என்னும் பொதுவினையும் 'உழவு' என்னுங் குறிப்பினால் அஃறிணைப்பெண்பாலை யொழித்தன.

இப்பெற்றம் பால் சொரிந்தன—இதிற் 'பெற்றம்' என்னும் அஃறிணைப் பொதுப்பெயரும், 'சொரிந்தன' என்னும் பொதுவினையும் 'பால்' என்னுங் குறிப்பினால் அஃறிணை யாண்பாலை யொழித்தன.

265. திணைபாலிடங்களுக்குப் பொதுவாகிய பெயர் வினைகளினுடைய பொதுத்தன்மையை மேலே வருகிற சிறப்புப்பெயரும் சிறப்புவினையும் நீக்கும்.

(உ-ம்.) சாத்தன் இவன், சாத்தன் இது, சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவும் ; ஒருவர் என் தாயார், ஒருவர் என் தகப்ப

ஞர் எனவும் ; மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும் ; பெயரின் திணைப்பொதுமையையும், பாற்பொதுமையையும் சிறப்புப் பெயர் வினைகள் வந்து நீக்கின.

அவரெல்லாம் இருந்தார், அவையெல்லா மிருந்தன, யாமெல்லாம் வருவோம், நீரெல்லாம் போமின், எனப் பெயரின் திணைப் பொதுமையையும், இடப்பொதுமையையும், சிறப்புப்பெயர் வினைகள் வந்து நீக்கின.

வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினையின் திணை பால் இடப்பொதுமையினைச் சிறப்புப் பெயர்கள் வந்து நீக்கின. மற்றவைகளையும் சிறப்புச்சொல்லோடு சேர்த்துக் காண்க.

**266.** பெயரிலும், வினையிலும், ரகரவீற்றுச்சொல்லின் அயலிலிருக்கும் ஆகாரம் ஓகாரமாம்.

(உ-ம்.) நல்லார்=நல்லோர் எனவும் ; கொண்டார்=கொண்டோர் எனவும் வருதல் காண்க.

**267.** செய்யுளில் ன, ள, ய ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாகும.

(உ-ம்.) வந்தான்=வந்தோன், செய்தாள்=செய்தோள், வந்தாய்=வந்தோய் எனவரும்.

செய்யுளிற் சில சமயங்களில் இவற்றையடுத்த அகரமும் ஓகாரமாகும்.

(உ-ம்.) தலைவன்=தலைவோன், கிழவன்=கிழவோன்.

**268.** வேற்றுமை யுருபுகள் பலவடுக்கி வந்தாலும், வேறு பலவடுக்கி வந்தாலும், வினைவேறு பலவடுக்கி வந்தாலும், இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல்லைக்கொண்டு முடியும்.

(உ-ம்.) அரசன் பகைவனை வாளால் வெட்டினன்—உருபு பலவடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக்கொண்டது.

சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான், சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை—என ஐயுருபும் குவ்வுருபும் வேறு பலவடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

வாள் கைக்கொண்டான், அருளறமுடையான்—என உருபுகள் தொக்கு அவ்வாறு வந்தன.

ஆடினான் பாடினான் சாத்தன், ஆடி ஓடி வந்தான், கற்ற கேட்ட பெரியோர் என வினைமுற்றும் வினையெச்சமும் வேறு பலவடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக்கொண்டன.

**269.** வேற்றுமை யுருபுகளும், வினைமுற்றுக்களும் பெயரெச்ச வினையெச்சங்களுமாகிய இவைகளுக்கும் இவற்றை முடிக்குஞ் சொல்லாகிய பெயர்வினைகளுக்கும் நடுவில் அவ்விடத்துக்குப் பொருந்துவனவாகிய வேறு சொற்கள் வருதலுமுண்டு, அவற்றிற்கு இடைப்பிறவரல் என்று பெயர்.

(உ-ம்.) சாத்தன் வயிறார வுண்டான்; அறத்தை அழகுபெறச் செய்தான்; இவைகளில் 'வயிறார,' 'அழகுபெற' என்பன இடைப்பிறவரலாம். வந்தானவ்வூருக்குப் போன சாத்தன், வந்த வடகாசி மன்னன், வந்து அவனூருக்குப் போனான் இவைகளும் அப்படியே.

**270.** வினைமுற்றும் வினையெச்சமும் முடிக்குஞ் சொல்லுக்கு முதலில் நிற்பதுமல்லாமல் ஈற்றிலும் நிற்கும்.

(உ-ம்.) வந்தான் சாத்தன் என்பது சாத்தன் வந்தான் எனவும், வந்துபோனான் என்பது போனான் வந்து எனவும் வரும்.

**271.** ஆறும்வேற்றுமை யுருபொழிந்த ஐ, ஆல், கு, இன், இல் என்னும் ஐந்துருபுகளும், முடிக்கும் வினைக்கு ஈற்றிலும் வரும்.

(உ-ம்.) குறைத்தான் மரத்தை.
வந்தான் கொற்றனால்.
கொடுத்தான் கொற்றனுக்கு.
நீங்கினான் ஊரின்.
போனான் வீட்டில்.

'புத்தகம் சாத்தனது' என ஆறும் வேற்றுமையுருபை யீற்றில் வைத்துரைத்தாற் 'சாத்தனது' என்பது குறிப்பு வினைமுற்றாகக் கருதப்படுமே யல்லாது ஆறும்வேற்றுமை யுருபாக ஒருநாளுங் கரு தப்பட மாட்டாது.

272. ஐயுருபு ஒன்றும் முடிக்குஞ் சொல்லின் ஈற்றில் தொகும்.

(உ-ம்.) கட்டினான் வீடு, வெட்டினான் மரம் என வரும்.

273. ஏதாவது ஒரு சொல் வினைகொண்டு முடியும் போது அதனினத்தையுந் தெரிவிக்கும்.

(உ-ம்.) சோறுண்டான்—என்பது கறி முதலியவைகளையும் உண்டான் என்ற தன் இனத்தையுந் தழுவியது.

நஞ்சுண்டவன் சாவான்—இதில் நஞ்சுண்டவன் என்னும் உயர் திணை ஆண்பாற்பெயர், நஞ்சுண்டவள், நஞ்சுண்டவர், நஞ்சுண்டது, நஞ்சுண்டன என்னும் உயர்திணைப் பெண்பால், பலர்பால், அஃறிணை யொன்றன்பால், பலவின்பால் இவைகளையுந் தழுவியது.

இதனை உபலக்ஷணம் என்பவர் வடநூலார்.

274. பெயரெச்சம், வினையெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலையெச்சம், எனவெச்சம், ஒழியிசை யெச்சம், எதிர்மறையெச்சம், இசையெச்சம், குறிப்பெச் சம் என்கிற பத்துவகை யெச்சமும், தம் எச்சமாகிய பெயர் வினைகளைக் கொண்டு முடியும்.

(உ-ம்.) செய்த சாத்தன் என்பதிற் 'செய்த' என்னும் பெயரெச்சம் தன்னெச்சமாகிய 'சாத்தன்' என்னும் பெயரைக்கொண்டது.

செய்து வந்தான் என்பதிற் 'செய்து' என்னும் வினையெச்சம் தன்னெச்சமாகிய 'வந்தான்' என்னும் வினையைக்கொண்டது.

சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம், 'முன்னே கொற்றன் வந்ததல்லாமல்' என்கிற தன்னெச்சமாகிய சில சொற்களைக் கொண்டது.

நல்லவனென்றான் என்னுஞ் சொல்லெச்சம், நல்லவனென்று சொன்னான் எனச் 'சொல்' லென்னுந் தன் னெச்சங்கொண்டது.

சாத்தானே கொண்டான் என்னும் பிரிநிலை யெச்சம் 'பிறர் கொள்ளவில்லை' யெனத் தன்னெச்சங்கொண்டது.

கடல் ஒல்லென ஒலித்தது என்னும் எனவெச்சம் தன்னெச்சமாகிய மிகவும் ஒலித்தது என்னும் வினையைக் கொண்டது.

கூரியவாள் காண், உண்ணுதற்கோ வந்தான் என்னும் ஒழியிசையெச்சம் முறையே இப்போது ஒடிந்துவிட்டது, கலகஞ்செய்ய வந்தான் எனத் தம்மெச்சங்கொண்டன.

யானோ செய்தேன், வருவதற்கு முரியன் என்பன எதிர்மறையெச்சம் ; இவை முறையே யான் செய்திலேன், வராமைக்கு முரியன் என தம்மெச்சங்கொண்டன.

"கற்றதனாலாய பயனென்கொல்?" இந்த இசையெச்சம் ஒருவன் பல நூல்களை நிரம்பக் கற்றதனால் என்று பொருள்படுதலால் எஞ்சிநின்ற இப்பல சொற்களைக் கொண்டது.

கல்லைக்கடிக்க நன்றாய்ச் சமைத்தாய் என்கிற குறிப்பெச்சம் நன்றாய்ச் சமைக்கவில்லை யெனத் தன்னெச்சங்கொண்டது.

## தொகைநிலைத்தொடர்—Elliptical Compounds.

**275.** வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொ

ழித்தொகை எனத் தொகைநிலைத் தொடர்மொழிகள் அறு வகைப்படும்.

**276.** ஐ முதலிய ஆறுருபும் வெளிப்படாமல் தொக்க தொடர்மொழிகள் வேற்றுமைத்தொகையாம்.

(உ-ம்.) நிலங்கடந்தான்—இரண்டாம் வேற்றுமைத்தொகை.
கல்லெறிந்தான்—மூன்ரும் வேற்றுமைத்தொகை.
சாத்தன்மகன்—நான்காம் வேற்றுமைத்தொகை.
ஊர்நீங்கினன்—ஐந்தாம் வேற்றுமைத்தொகை.
சாத்தன்கை—ஆரும் வேற்றுமைத்தொகை.
காட்டுப்புலி—ஏழாம் வேற்றுமைத்தொகை.

இவை வேற்றுமைத் தழுவுதொடர் என்றும் பெயர் பெறும்.

வேற்றுமை யுருபுதொகை.—6.

இவ்வேற்றுமைத் தொகைகளுள் உருபுகள் விரிந்த விடத்துஞ் சொற்கள் பொருட்பொருத்த முறுது நிற்குமா யின் அவை வேற்றுமைத் தழாத்தொடர் அல்லது உருபும் பயனு முடன்ரெக்க தொகை யெனப்படும்.

(உ-ம்.) கைக்களிறு என்பதிற், கையைக் களிறு என ஐயுருபு விரிந்தும்பொருள் பொருந்தாமையினலே 'உடைய' என ஒருசொல் பயனுக வந்து தோன்ற முடிந்தது. மற்றை வேற்றுமைகளு மிப் படியே.

வேற்றுமை யுருபும் பயனுமுடன் ஞெக்க தொகை—6.

ஆக வேற்றுமைத்தொகை—12.

**277.** காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்சவிகுதி யும் ஒழியப் பகுதி யளவாய் நின்று பெயரை அவாவி நிற் பது வினைத்தொகையாம்.

(உ-ம்.) கொல்யானை, விடுகணை.
நேற்று விடுகணை—இறந்தகால வினைத்தொகை.
இன்று விடுகணை—நிகழ்கால வினைத்தொகை.
நாளை விடுகணை—எதிர்கால வினைத்தொகை.
இவை விட்ட, விடுகிற, விடும் என்று விரியும்.

போ, கா, மோ என்னும் பகுதிகளையுடைய பெயரெச்சங்கள் ஈறுகெட்டு வினைத்தொகை யாகா.

சா, ஈ இவைமாத்திரம் சாநாள், ஈபொருள்என வினைத்தொகையாம்.

தா, வா, தரு, வரு என்றும், நட, இற, நடந்திடு, இறந்திடு என்றும் விகாரப்பட்டு வினைத்தொகையாம்.

278. வினைத்தொகை செய்பொருளின்மைக்கும் செய்பொருளுண்மைக்கும் பொதுவாகிய பகுதியிற்செய்பொருள் இன்மைக்கே பெரும்பான்மை வரும்.

(உ-ம்.) இடி, அறு, கரை இவற்றோடு சுவர், கயிறு, பொருள், என்பவற்றைக் கூட்டுக. விரிந்தால், இடிந்த, இடிகின்ற, இடியும் என வருமேயன்றி, இடித்த, இடிக்கின்ற, இடிக்கும் என வாராமை காண்க. மற்றையனவு மிப்படியே.

உரைகல், கரைகல், எறிவேல் என்பவை வழக்கிற் செய்பொருளில் வரும். இவை செயப்பாட்டு வினைத்தொகையெனவும் படும்.

வினைத்தொகை—2.

279. பண்புக்கும், பண்பிக்கும், நடுவே அவற்றிற்கு உண்டாயிருக்கின்ற ஒற்றுமை நயத்தை விளக்கும் 'ஆகிய' வென்னும் பண்புருபு தொக்கது பண்புத்தொகையாம்.

இது-வண்ணம், வடிவு, அளவு, சுவை இவைகளால் நான்கு வகைப்படும்.

(உ-ம்.) செந்தாமரை, கருங்குவளை...வண்ணப்பண்புத்தொகை.
வட்டக்கல், சதுரப்பலகை—வடிவுப்பண்புத்தொகை.
ஒருபொருள், எழுகடல்...அளவுப்பண்புத்தொகை.
துவர்க்காய், இன்சொல்...சுவைப்பண்புத்தொகை.

இவற்றில் முதலிலுள்ளன முறையே செம்மையாகிய, வட்டமாகிய, ஒன்றாகிய, துவராகிய என விரியும்.
மற்றவைகளுக்கு மிப்படியே.

பண்புத்தொகை—4.

**280.** ஒருபொருளுக் குண்டாயிருக்கிற பொதுப்பெயருக்கும் சிறப்புப்பெயருக்கும் நடுவில் 'ஆகிய' வென்னும் உருபு தொக்க தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம்.

(உ-ம்.) சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன், வைகையாறு, பொதியமலை, அசோகமரம், மதுரைநகர் எனவரும்.

உருவகவணி (Metaphor) பற்றிக் கூறும்போதும் இத்தொகை நிகழும்.

(உ-ம்.) முகமதி—இது முகமாகிய மதியென விரியும்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை.—2.

**281.** வினை, பயன், மெய், உரு இவைகளைப்பற்றி வரும் உவமையுருபு தொக்க தொடர்மொழி உவமைத்தொகையாம்.

(உ-ம்.) குருவி கூப்பிட்டான் ... வினையுவமைத்தொகை.
கற்பகக்கையான் ... பயனுவமைத்தொகை.
உடுக்கையிடை ... மெய்யுவமைத்தொகை.
பவளவாய் ... உருவுவமைத்தொகை.

போல், நேர், நிகர் முதலியவை உவமையுருபுகளாம்.

(உ-ம்.) குருவிபோலக் கூப்பிட்டான்
கற்பகம்போலும் கையான் } என விரியும்.

உவமைத்தொகை—4.

**282.** இடையிலும் கடையிலும் உம்மை தொக்க சொற்களின் தொடர் உம்மைத்தோகையாம்.

இஃது—எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை இவற்றால் நான்கு வகைப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | ஒன்றேகால், கபிலபரணர் | ... | எண்ணலளவை | உம்மைத் தொகை. |
| | கழஞ்சேகால் | ... | எடுத்தலளவை | |
| | கலனே தூணி | ... | முகத்தலளவை | |
| | சாணங்குலம் | ... | நீட்டலளவை | |

இவை முறையே ஒன்றுங்காலும், கபிலனும் பரணனும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணும் அங்குலமும் என விரியும்.

உம்மைத்தொகை—4.

**283.** வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைக்கும புறத்தில் வேறுமொழி தொக்குவருவது அன்மொழித்தோகையாம்.

[எனவே இருவகை இருபெயரொட்டுப் பண்புத்தொகையு மொழிந்த மற்றைய வேற்றுமைத் தொகை-12-ம், வினைத்தொகை-2-ம், பண்புத்தொகை-4-ம், உவமைத்தொகை-4-ம், உம்மைத் தொகை-4-ம் ஆகிய இவ்விருபத்தாறு தொகைகளின் புறத்தும் அன்மொழித் தொகை பிறக்கு மென்பதுணர்க.]

(உ-ம்.) பூங்குழல்—இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தாழ்குழல்—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

கருங்குழல்—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

துடியிடை—உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

உயிர்மெய்—உம்மைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

இவை முறையே பூவை முடித்த குழலையுடையாள் ; தாழ்ந்த குழலினையுடையாள் ; கருமையாகிய குழலையுடையாள் ; துடிபோலும் இடையை யுடையாள் ; உயிரும் மெய்யுங் கூடிப்பிறந்த எழுத்து என விரியும்.

அன்மொழித்தொகை—26.

**284.** முன்மொழியும், பின்மொழியும், பன்மொழியும், புறமொழியும் என்கிற நான்கிடங்களிலும் தொகை நிலைத் தொடர் பொருள் சிறந்து நிற்கும்.

(உ-ம்.) வேங்கைப்பூ, செந்தாமரை—முன்மொழியிற் பொருள் சிறந்தன.

கண்ணிமை, வெண்மதி—பின்மொழியிற் பொருள் சிறந்தன.

பாக்குவெற்றிலை, சேர சோழ பாண்டியர்—பன்மொழியிற் பொருள் சிறந்தன.

தேன்மொழி, கருங்குழல்—இவற்றையுடைய பெண் என்கிற புறமொழியிற் பொருள் சிறந்தன.

**285.** உயர்திணை ஒருமையில் வருகிற உம்மைத்தொகை, ரவ்வொற்றும் களவீறுமாகிய பலர்பால் விகுதியை யுடையதாம்.

(உ-ம்.) கபிலபரணர், சேரசோழ பாண்டியர், தேவன்றேவிகள் என வரும்.

**286.** அஃறிணை ஒருமையிலும் திணைப்பொது ஒருமையிலும் வருகிற உம்மைத்தொகை பன்மை விகுதி பெற்றும் பெறாதும் வரும்.

(உ-ம்.) ஆடுமாடுகள் ஆடுமாடு எ-ம், தாய்தந்தையர் தாய்தந்தை எ-ம், வரும.

287. வேற்றுமை யுருபுகள் முதலியன தொக்குநின்ற வழி, பொருள்களினாலே மயங்குந் தன்மையையுடைய தொடர்மொழிகள் இரண்டுமுதல் ஏழீறாகிய பொருள் களால் மயங்கும்.

(உ-ம்.) 'தெய்வவணக்கம்' என்பது தெய்வத்தை வணங்கு கின்ற வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இருபொருளாலே மயங்கியது.

'நீர்மோர்' என்பது நீரையுடைய மோர், நீரோடுகூடிய மோர், நீரும் மோரும் என மூன்றுபொருள்களாலே மயங்கியது.

'சொல்லிலக்கணம்' என்பது சொலலின் இலக்கணம், சொற் கிலக்கணம், சொல்லில் இலக்கணம், சொல்லிலக்கணஞ் சொன்ன நூல் என நான்கு பொருள்களாலே மயங்கியது.

'பொன்மணி' என்பது பொன்னலாகியமணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண்மணி, பொன்னோடு சேர்ந்தமணி, பொன் னும் மணியும் என ஐந்துபொருள்களாலே மயங்கியது.

'மரவேலி' என்பது மரத்தைச்காக்கிற வேலி, மரத்துக்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின்புறத்து வேலி, மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி என ஆறு பொருள்களாலே மயங்கியது.

'சொற்பொருள்' என்பது சொல்லால் அறியப்படுகிற பொ ருள், சொல்லினதுபொருள், சொல்லுக்குப் பொருள், சொல்லின் கட்பொருள், சொல்லும்பொருளும், சொல்லாகிய பொருள், சொல் லானது பொருள் என ஏழுபொருள்களாலே மயங்கியது.

## தொகாநிலைத்தொடர்—Non-elliptical Compounds.

288. வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழு வாய், விளி, வேற்றுமையுருபுகள் விரிந்துநிற்கும் புணர்ச்சி, இடைச்சொற் புணர்ச்சி, உரிச்சொற்புணர்ச்சி, அடுக் குப்புணர்ச்சி இவ்வொன்பதும் தோகாநிலைத் தொடர்மொழிக ளாம்.

(உ-ம்.) உண்டான் சாத்தன் ... வினைமுற்றுத்தொடர்.
உண்டசாத்தன் ... பெயரெச்சத்தொடர்.
உண்டுவந்தான் ... வினையெச்சத்தொடர்.
சாத்தன்வந்தான் ... எழுவாய்த்தொடர்.
கொற்றாகொள் ... விளித்தொடர்.
குடத்தைச்செய்தான் ... உ-ஆம் வேற்றுமைவிரி.

(மற்றவேற்றுமை விரிகளுங்கொள்க.)

மற்றொன்று ... இடைச்சொற்றொடர்.
நனிபேதை ... உரிச்சொற்றொடர்.
பாம்பு பாம்பு ... அடுக்குத்தொடர்.

## வழூ—Ungrammatical Expressions.

289. திணையும், பாலும், இடமும், காலமும், வினாவும், விடையும், மரபும் ஆகிய இவை மயங்கிவந்தால் வழூவாம்.

(உ-ம்.)

அவன் வந்தது ... ... திணைவழூ.
அவர் வந்தான் ... ... பால்வழூ.
யான் வந்தான் ... ... இடவழூ.
நாளை வந்தான் ... ... காலவழூ.
ஒரு விரலைக்காட்டிச் 'சிறிதோ பெரிதோ' என்பது } வினாவழூ.
'தில்லைக்கு வழி யாது ?' என்றவனுக்குச் 'சிவப்புக்காளை முப்பதுபணம்' என்பது } விடைவழூ.
யானை மேய்ப்பானை இடையன் என்பது மரபுவழூ.

290. திணை ஐயத்தையும், பால் ஐயத்தையும் அதன் அதன் பொதுச்சொல்லாலும், துணிந்த பொருளின்மேல் அல்லாத தன்மையை வைத்துஞ் சொல்வார்கள்.

(உ-ம்.) 'குற்றியோமகனோ அவ்விடத்தே தோன்றுகிற உரு' எனத்திணையில் ஐயம்வந்தபோது 'உரு' என்கிற பொதுச்சொல்லாலும்; 'ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்' எனப் பாலில் ஐயம் வந்தபோது, 'தோன்றுகிறவர்' என்கிற பொதுச் சொல்லாலும்,

இனித் துணிந்தபொருள் குற்றியாயின் மகனன்று, மகனுயிற் குற்றியல்லன் எ-ம், ஆண்மகனெனிற் பெண்மகளல்லள்; பெண்மகளெனின் ஆண்மகளல்லன் எ-ம், ஒன்றெனிற் பலவன்று, பலவெனின் ஒன்றல்ல எ-ம், சொல்லுக.

**291.** வேறொருவகை துணிந்த பொருள்மேல் அன்மையை வைத்துச் சொல்லாமல் திணைப்பொதுச் சொல்லுக்கும் பாற்பொதுச் சொல்லுக்கும் பயனில்லையாக அப்பொருளின் பெயரைக் கூறுதலும் குற்றமன்று.

(உ-ம்.) அவ்வுரு குற்றி, அவ்வுரு மகன், ஆண்மகன், பெண்மகள் எனக்கூறுக.

## வழுவமைதி.

**292.** பாலுந்திணையும் மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிப்பு ஆகிய இவைகளால் வழுவிவந்தாலும் குற்றமில்லை.

### பால்வழுவமைதிகள்.

(உ-ம்.) தன்மகனை 'என்னம்மை வந்தாள்' என்பதில் மகிழ்ச்சியினுல் ஆண்பால் பெண்பாலாயிற்று.

ஒருவனை 'அவர் வந்தார்' என்பதில் உயர்வினுல் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

'தாதா உலகுக்கோர் தாயே' என்பதிற் சிறப்பினுல் ஆண்பால் பெண்பாலாயிற்று.

'கசையடி பெறுவீர் காளையரே'—இஃது ஒருவனைப் பார்த்துச் சொல்லியபடியால், இதிற் கோபத்தால் ஒருமைப்பால் பன்மைப் பாலாயிற்று.

பெண்புத்தி கேட்பானை 'இவன்பெண்' என்பதில் இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

## திணைவழுவமைதிகள்.

ஒரு பசுவை 'என்னம்மை வந்தாள்' என்பதில் மகிழ்ச்சியால் அஃறிணை உயர்திணையாயிற்று.

'கிளியாரே' என்பதில் உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

'என் பிள்ளைகளே என்பொருள்' என்பதிற் சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

'ஒருவர் சொல்லுங்கேளான், தானும் அறிந்து கொள்ளான், அவ்வுயிரால் யாதுபயன்?' என்பதிற் கோபத்தால் உயர்திணை அஃறிணையாயிற்று.

'நாம் அரன் உடைமை' என்பதில் இழிப்பினால் உயர்திணையஃறிணையாயிற்று.

**293.** ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும் பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓரிடத்திற் பிற இடச்சொல்லையும் தழுவிக் கூறுதலும் உண்டு.

## எண்வழுவமைதிகள்.

(உ-ம்.) வெயிலெல்லா மறைத்தது மேகம், இரண்டு கண்ணுஞ் சிவந்தது என்பன ஒருமையிற் பன்மையும் பன்மையில் ஒருமையும் வந்தன.

## இடவழுவமைதி.

சாத்தன் தாய் இங்ஙனஞ் செய்வேனோ?—'சாத்தன் தாய்' என்னும் படர்க்கை 'செய்வேனோ?' என்னுந் தன்மையின் வினையைத் தழுவியது.

## காலம் :—Tenses.

**294.** இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் காலம் மூன்று வகைப்படும்.

**295.** மூன்று காலத்திலும், தொழிலிடையறாமல் நடக்கின்ற பொருளை நிகழ்காலத்தாலும் எதிர்காலத்தாலுஞ் சொல்லவேண்டும்.

(உ-ம்.) தெய்வமிருக்கிறது, ஆறொழுகுகிறது, அரசன் ஆளுகின்றான் எனவும்; தீச்சுடும், குதிரை கனைக்கும், நாய் குரைக்கும் எனவும் வரும்.

காலவழுவமைதி.

**296.** விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும், நிகழ்காலம் இறந்தகால எதிர்காலங்களாகவும், எதிர்காலம் இறந்தகால நிகழ்காலங்களாகவும், இறந்தகாலம் எதிர்கால நிகழ்காலங்களாகவும் வரும்.

(உ-ம்.) இனி உண்ணப்போகும் ஒருவனை, உடன்கொண்டு போகவிரும்பின் மற்றொருவன் பார்த்து, இன்னும் உண்டிலையோ? என்றால், 'உண்டேன் உண்டேன்' என்று அவன் சொல்லுவதும் உண்கிறவன் அப்படிச்சொல்வதும் வழக்கம் ஆதலால் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின. இவை விரைவு.

நீ அவனுடனே பகைத்தாற் செத்தாய், சாகிறாய்; இந்தக் காட்டிற் போனால் துணியிழந்தாய், இழக்கிறாய் என முறையே எதிர்காலம், இறந்தகாலமும் நிகழ்காலமாயிற்று. சாதலும், துணி இழத்தலும் ஒருவேளை தப்பினாலும் தப்பும். ஆதலால், இது பெரும்பான்மை கருதிய மிகுதி யென்று சொல்லப்படும்.

அறஞ்செய்தாற் சுவர்க்கம் புகுந்தான், புகுகிறான்; எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறினால் மழை பெய்தது, பெய்கிறது: தெளிவினால் எதிர்காலம், இறந்தகாலமும் நிகழ்காலமுமாயிற்று.

யாம் பண்டு விளையாடுவது இச்சோலை, விளையாடுகிறது இச்சோலை: இயல்பினால் இறந்தகாலம், எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று.

## வினு—Question.

**297.** அறிவு, அறியாமை, ஐயம், கொளல், கொடை, ஏவல் என வினு அறுவகைப்படும்.

(உ-ம்.) 'ஆசிரியன் மாணுக்கனே இப்பாட்டுக்குப் பொருளென்னே?' எனக்கேட்பது } அறிவினு.

'மாணுக்கன் ஆசிரியனே இப்பாட்டுக்குப் பொருளென்னே?' எனக்கேட்பது } அறியாவினு.

'குற்றியோ மகனே?' எனக்கேட்பது ... ஐயவினு.

'பயறுண்டோ செட்டியாரே?' எனக் கேட்பது } கொளல்வினு.

'சாத்தா உனக்கு ஆடையில்லேயோ?' எனக்கேட்பது } கொடைவினு.

'சாத்தா உண்டிலேயோ?' எனக்கேட்பது... ஏவல்வினு.

## விடை—Answer.

**298.** சுட்டு, மறை, நேர், ஏவல், வினுதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இன்மொழி என விடை எட்டு வகைப்படும்.

(உ-ம்.) தில்லேக்கு வழியாது? எனின், 'இது' என்பது } சுட்டுவிடை.

சாத்தா இது செய்வாயா? என்றவனுக்கு,
'செய்யே' னென்பது ...மறைவிடை.
'செய்வேன்' என்பது ...நேர்விடை.
'நீ செய்' என்பது ...ஏவல்விடை.

'செய்வேனே?' என்பது ...வினுவிடை.

'தலேநொந்தது,' 'நோகிறது' என்பன } உற்றதுகூறல்விடை.

'தலேநோகும்' என்பது ...உறுவதுகூறல்விடை.
'மற்ருென்று செய்வேன்' என்பது...இனவிடை.

## மரபு—Idiom.

**299.** எந்தப்பொருளை எந்தச் சொல்லாற் பெரியோர்கள் சொன்னார்களோ அப்படியே நாமும் செல்லுதல் மரபு ஆம்.

(உ-ம்.) பசுவின்கன்று, வாழைக்கன்று, குதிரைக்குட்டி, பாம்புக்குட்டி, அணிற்பிள்ளை, தென்னம்பிள்ளை, கீரிப்பிள்ளை, குருவிக்குஞ்சு என்பன மரபாம். பசுவின்குட்டி, குதிரைக்கன்று, அணிற்குட்டி, கீரிக்குஞ்சு என்பன குற்றமாம்.

**300.** எழுத்தின் தன்மை திரியாமல் பொருள் வேறுபட்ட தொடர்ச்சொற்கள், குறித்த சொல்லின் இறுதியும் முதலுந்தோன்ற, இசையறுத்துச் சொல்லுகிற வேறுபாட்டால் துணிவுண்டாகும்.

(உ-ம்.) குறும்பரம்பு, செம்பொன்பதின்கழஞ்சு: இவற்றைக் குறும் பரம்பு, குறும்ப ரம்பு (குறும்பர் அம்பு), எனவும்: செம்பொன் பதின்கழஞ்சு, செம் பொன் பதின்கழஞ்சு (செம்பு என்பதின் கழஞ்சு) எனவும்; இசையறுத்து உச்சரிக்க.

**301.** சுட்டுப்பெயர் வாக்கியத்திற்கும் பின்னேவரும்.

(உ-ம்.) நம்பிவந்தான் அவனுக்குச் சோறிடு; எருது வந்தது அதற்குப் புல்லிடு எனவரும். மற்றைத் திணை பால்களிலும் இவ்வாறே காண்க.

**302.** விரைவு, சினம், உவகை, அச்சம், அவலம், மிகுதி இப்பொருள்களைப்பற்றிச் சொற்கள் அடுக்காகத் தொடர்ந்து இரண்டுமுதல் நான்குவரையிலும்வரும். இஃது அடுக்குத் தொடராம்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | போ போ | ... | விரைவு. |
| | எறி எறி | ... | சினம். |
| | வருக வருக | ... | உவகை. |

பாம்பு பாம்பு ... அச்சம்.
வாழேன் வாழேன் ... அவலம்.
வந்து வந்து போனான் ... மிகுதி.

**303.** இவ்வளவென்று அறிந்த பொருளையும், எக்காலத்தும் எவ்விடத்திலும் இல்லாதபொருளையும், வினையோடு கூட்டிச் சொல்லும்போது முற்றும்மை வேண்டும்.

(உ-ம்.) தமிழ் நாட்டு மூவரசரும் வந்தார்; இறைவனுக்குக் கண் மூன்றும் முச்சுடர் எ-ம், முயற்கோடு எங்கும் இல்லை; ஆகாயப்பூ என்றுமில்லை எ-ம், வரும்.

**304.** செயப்படுபொருளை வினைமுதல் போல வைத்து அதன்மேல் வினைமுதல் வினையைச் சொல்லுதலே வழக்கத்திற் பெரும்பான்மை. இதுவே தமிழ்மரபு.

(உ-ம்.) இம்மாடு யான் கொண்டது.
(இம்மாடு என்னாற் கொள்ளப்பட்டது.)
இச்சோறு யான் கொடுத்தது.
(இச்சோறு என்னாற் கொடுக்கப்பட்டது.)

இவற்றிலுள்ள 'யான்' என்பனவெல்லாம் மூன்றாம்வேற்றுமைக் கருத்தாக்களாம்.

**305.** கருவி நிலம் செயல் காலங்களையும் வினைமுதல் போல வைத்துக் கூறுதலும் உண்டு.

(உ-ம்.) இவ்வெழுத்தாணி யானெழுதியது, இவ்வீடு யானிருந்தது, இத்தொழில் யான்செய்தது, இந்நாள் யான் பிறந்தது எனவரும்.

**306.** பொருள் முதலாகிய ஆறினையும் அடையாகப் பெற்றுவருகிற சொற்கள் இனமுள்ளனவா யிருப்பதும், அன்றி இனம் இல்லாதனவுமாம்.

| இனமுள்ளன. | இனமில்லாதன. | | |
|---|---|---|---|
| செய்க்குடம் | உப்பளம் | ... | பொருள். |
| குளநெல் | ஊர்ச்சவை | ... | இடம். |
| கார்த்திகைவிளக்கு | நாளரும்பு | ... | காலம். |
| பூமரம் | இலைமரம் | ... | சினை. |
| செந்தாமரை | வெண்மதி | ... | குணம். |
| ஊதுகொம்பு | தோய்தயிர் | ... | தொழில். |

இனமுள்ள அடைமொழிகள் பிறதினியையபு நீக்கிய விசேடணங்கள் என்றும், இனமில்லாத அடைமொழிகள் இயைபின்மை நீக்கிய விசேடணங்கள் என்றும் பெயர் பெறும்.

**307.** ஓர் அடையும் ஒரு சினையும் ஒரு முதலையடுத்து ஒன்றை ஒன்று விசேடித்து வருதலும், இரண்டை முதலை விசேடித்து வருதலும், உளவாம்.

(உ-ம்.) வேற்கை முருகன், செங்கால் நாரை, பெருவெள்ளை அரிசி, சிறுகருங் காக்கை எனவரும்.

பொதுவியல் முற்றிற்று.

## ON PARTICLES.

## இடையியல்.

**308.** இடைச்சொல்லாவது பெயர்வினைகளைப் போலத் தனித்துவராமல் அவைகளைச்சார்ந்து பொருளை யுணர்த்தி வருஞ் சொல்லாம்.

**309.** ஐம்முதலிய வேற்றுமை உருபுகளும் அன், ஆன் முதலிய விகுதிகளும், சாரியைகளும், சுட்டும் வினவும், பிற வழியால் வருவனவும், இடைச்சொற்களாம்.

**310.** ஏகாரம் தேற்றத்திலும், பிரிநிலையிலும், வினவிலும், ஈற்றசையிலும் வரும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | கடவுளே உயர்ந்தவர் | ... | தேற்றம். |
| | அவனே கொண்டான் | ... | பிரிநிலை. |
| | நீயே கொண்டாய்? | ... | வினா. |
| | "வகுத்தனர் கொளலே" | ... | ஈற்றசை. |

**311.** ஓகாரம் ஐயத்திலும், எதிர்மறையிலும், வினவிலும், சிறப்பிலும் வரும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | குற்றியோ மகனோ | ... | ஐயம். |
| | பசுவோ வந்தது | ... | வினா. |
| | அவனோ கொண்டான் | ... | எதிர்மறை. |
| | ஓ ஓ பெரியன் | ... | உயர்வு சிறப்பு. |
| | ஓ ஓ கொடியன் | ... | இழிவு சிறப்பு. |

**312.** உம்மை எதிர்மறையிலும், சிறப்பிலும், ஐயத்திலும், எச்சத்திலும், முற்றிலும், எண்ணிலும் வரும்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | வருதற்குமுரியன் | ... | எதிர்மறை. |
| | குறவரும் மருளுங்குன்று | ... | உயர்வுசிறப்பு. |

| | | |
|---|---|---|
| புலையனும் விரும்பாதயாக்கை | ... | இழிவு சிறப்பு. |
| பத்தாயினும் எட்டாயினுங்கொடு, | ... | ஐயம். |
| சாத்தனும் வந்தான் | ... | எச்சம். |
| எல்லாரும் வந்தார் | ... | முற்று. |
| சாத்தனும் கொற்றனும் வந்தார் | ... | எண். |

**313.** மற்று என்பது, பிறிதென்னும் பொருளில்வரும்.

(உ-ம்.) அறஞ்செய்யத்தக்கது, மற்றது செய்யத்தகாதது.

**314.** பின், முன் என்பன காலப்பொருளையும் இடப்பொருளையுந் தந்து ஏழாம் வேற்றுமைப் பொருளிலேயே வரும் இடைச்சொற்களாம்.

(உ-ம்.) பின்பிறந்தான், முன் பிறந்தான் எ-ம், பின் உட்கார்ந்தான், முன் உட்கார்ந்தான் எ-ம், வரும்.

**315.** பின் என்பதொன்றும் மற்றென்னும் பொருளிலும் வரும்.

(உ-ம்.) அதை யன்றிப் பின் எதைச்செய்வேன் ?

பின், முன், என்பவை பின்பு, முன்பு ; பின்னை, முன்னை ; பின்னர், முன்னர் எ-ம், மற்று-என்பது மற்றை எ-ம், விகாரப்பட்டு வரும்.

இடையியல் முற்றிற்று.

## ON QUALIFYING WORDS.

## உரியியல்.

**316**. உரிச்சொல் என்பது குணத்தை யுணர்த்திப் பெயர் வினைகளுக்கு உரிமைபூண்டு செய்யுள் வழக்கத்தில் வழங்குஞ் சொல்லாம்.

(உ-ம்.) நனிபேதை, தவ வுழைத்தான்.

**317.** சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தையுணர்த்தும் உரிச்சொற்களாம்.

**318.** கடி என்பது காவல், கூர்மை, மாசனை, ஒளி, அச்சம், சிறப்பு, புதுமை, மிகுதி, விரைவு முதலிய பல குணத்தை உணர்த்தும் உரிச்சொல்லாம்.

மற்றவைகளு மிப்படியே.

**319.** இதிற் சுருங்கச்சொல்லிய இலக்கணங்களையே ஏதுவாகக்கொண்டு சொல்லாதுவிட்ட மற்றவைகளையும் ஆராய்ந்தறிந்துகொள்க.

உரியியல் முற்றிற்று.



## SYNTAX.

## சொற்றொடரியல்.

**320.** சொற்றொடர் ஆவது பெயர் முதலிய சொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்து நிற்பது.

### Sentence.

**321.** வாக்கியமாவது எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருள் முதலியவைகளோடு கூடியேனும் கூடாதேனும் முடிவுபெற்று நிற்பது ஆம்.

(உ-ம்.) பொன்னன் மரத்தை வெட்டினன்.

இஃது எழுவாயும் பயனிலையுஞ் செயப்படு பொருளோடு கூடியது.

பொன்னன் வந்தான்.

இஃது எழுவாயும் பயனிலையுஞ் செயப்படு பொருளோடு கூடாதது.

### Subject.

**322.** எழுவாயாவது வாக்கியத்தின் முதற்பொருள் ஆம். எழுவாய் என்பது கர்த்தா.

(உ-ம்.) 'பொன்னன் வந்தான்' என்பதில், 'பொன்னன்,' என்பது வாக்கியத்தின் முதற்பொருளாகிய எழுவாயாம்.

### Predicate.

**323.** பயனிலையாவது வாக்கியத்தின் முதற்பொருளின் செயலைக் காண்பிப்பது.

மேல்வாக்கியத்தில் 'வந்தான்' என்பது வாக்கியத்தின் முதற்பொருளாகிய 'பொன்ன'னது செயலாகிய 'வருதலை'க் காட்டிற்று.

## Object.

**324.** செயப்படுபொருளாவது வினைமுதற் றொழிற்பயன் உறுவது. இதனைச் செயப்பொருளென்றுங் கூறுவதுண்டு.

(உ-ம்.) சாத்தன் புலியைக் கொன்றான். இவ்வாக்கியத்திற் சாத்தனாகிய வினைமுதலினது தொழிலாகிய கொல்லுதலின் பயனை யுறுவது புலியாதலிற் 'புலி' செயப்படுபொருளாயிற்று.

**325.** வாக்கியத்தில் எழுவாய் தொக்கு வருவதும் உண்டு.

(உ-ம்.) வருகிறான்: இதில் 'அவன்' என்னும் எழுவாய் தொக்குவந்தமை காண்க.

**326.** எழுவாயேயன்றிப் பயனிலை தொக்குவருவதும் உண்டு.

(உ-ம்.) இவர்களுக்குள் நல்லவன் எவன்? இதன் கண்ணே 'இருக்கிறான்' என்னும் பயனிலை தொக்குவந்தமை காண்க.

**327.** எழுவாய் ஒன்றும் பலவும் ஒரே பயனிலையையும் பலபயனிலைகளையும் கொள்ளும்; பல பயனிலைகளாகிய வினைகளிற் கடைசி வினைமாத்திரம் முற்றுவினையாம்.

(உ-ம்.) 'இவனும் அவனும் தோட்டத்தில் இருந்தார்கள்' என்பதில் இரண்டு எழுவாயும் ஒரே பயனிலை கொண்டன.

'அரசன் மந்திரியை அழைத்துக் காரியத்தை விசாரித்து உத்தரவு சொன்னான்' என்பதில் ஒரே எழுவாய் மூன்று பயனிலைகளைக் கொண்டது.

**328.** பயனிலை எழுவாயோடு திணை, பால், இடம் ஆகிய இவைகளில் மாறுபடாமல் இசைந்து நிற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | அவன் | ... | ... | வந்தான். |
| | அவள் | ... | ... | வந்தாள். |
| | அவர் | ... | ... | வந்தார். |
| | அது | ... | ... | வந்தது. |

| | | | |
|---|---|---|---|
| அவை | ... | ... | வந்தன. |
| நான் | ... | ... | வந்தேன். |
| நாம் | ... | ... | வந்தோம். |
| நீ | ... | ... | வந்தாய். |
| நீர் | ... | ... | வந்தீர். |

### வாக்கிய வகைகள்.—**Kinds of Sentences**.

**329.** ஓர் எழுவாயும் ஒரு பயனிலையும் உடைய வாக்கியம் தனிவாக்கியம் (**Simple Sentence**) என்னப்படும். இதிலே செயப்படுபொருள் முதலிய மற்றைவேற்றுமைச் சொற்கள் வந்தாலும் தனிவாக்கியமேயாம்.

(உ-ம்.) இராமன் இலங்கைக்குச் சென்றான் ; இராமன் தன் கைவாளியால் இராவணனைக் கொன்றான்.

**330.** மேற்கூறிய தனிவாக்கியத்தை யடுத்துச் சில அடைவாக்கியங்கள் (**Subordinate Sentences**) வருமாயின் அது கலப்பு வாக்கியம் (**Complex Sentence**) என்னப்படும்.

(உ-ம்.) குடிகள் களிக்குமாறு நன்றாய் ஆள்பவன் யாவனோ அவனே அரசனென்னத் தக்கவன்.

**331.** பல தனிவாக்கியங்கள் கொண்டுவருவதும் தனிவாக்கியமும் கலப்பு வாக்கியமுஞ் செறிந்து வருவதுமாகிய வாக்கியங்கள் தொடர் வாக்கியங்கள் (**Compound Sentences**) என்னப்படும்.

(உ-ம்.) ஆலவாயில் வந்து அமுதவாயன் எனப் பெயர் பெற்றவனும், பழைய தமிழ் நூல்கள் பலவற்றிற்கு உரை வகுத்தவனும், நச்சினார்க்கினியனெனும் பெயருடையவனும் யாவனோ அவனைப் புகழ்ந்து பாடுவோமாக.

சொற்றொடரியல் முற்றிற்று.

## PROSODY.

## யாப்பியல்.

**332.** யாப்பு என்பது பலவகைச் சொற்களால் உறுப்புக்களை உடைத்தாகப் பாடப்படுவது.

யாப்பு, பாட்டு, பா, செய்யுள், தூக்கு, தொடர்பு, கவி என்பன ஒருபொருட் சொற்களாம்.

**333.** உறுப்புக்களாவன, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை இவ்வாறும் ஆம்.

**334.** எழுத்துக்களாவன எழுத்திலக்கணத்திற் கூறிய முதலும் சார்பும ஆகிய இருவகை எழுத்துக்களும் ஆம்.

**335.** அசை—நேர் அசை, நிரை அசை என இருவகைப்படும்.

(1) குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் தனித்தாயினும் ஒற்றடுத்தாயினும் வரின் நேரிசை ஆம்.

(உ-ம்.) அ-குறில் தனியே வந்த நேரசை.
ஆ-நெடில் தனியே வந்த நேரசை.
அல்-குறில் ஒற்றடுத்து வந்த நேரசை.
ஆல்-நெடில் ஒற்றடுத்து வந்த நேரசை.

(2) குறில் இணைந்தும் குறில் நெடில் இணைந்தும் இவை ஒற்றடுத்தும் வரின் நிரையசையாம்.

(உ-ம்.)

பல—குறில் இணைந்து வந்த நிரையசை.
புரு—குறில் நெடில் இணைந்து வந்த நிரையசை.
அணில்—குறில் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரையசை.
இருல்—குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரையசை.

## Feet.

336. சீராவது இருவகையசையும் சிறுபான்மை தனித்தும், பெரும்பாலும் இணைந்தும் வருவது ஆம்.

337. அச்சீர்—அசைச்சீர், இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் ; அல்லது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்காம்.

338. அவற்றுள் அசைச்சீர் அல்லது ஓரசைச்சீர் என்பது தனித்துவரும் நேரசையும் நிரையசையும் ஆகிய இரண்டுமாம்.

(உ-ம்.) நேரசைச் சீருக்கு உதாரண வாய்ப்பாடு...நாள்.
நிரையசைச் சீருக்கு உதாரண வாய்ப்பாடு...மலர்.

339. இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலே வரும். அவற்றோடு முறையே குற்றியலுகரஞ் சேர்ந்து, 'காசு' என்வும், 'பிறப்பு, எனவும் வருவதும் உண்டு. இவையும் வெண்பாவினீற்றில் வருவனவாம்.

340. இயற்சீர் அல்லது ஈரசைச்சீர் என்பது நேர் நேர், நிரை நேர், நிரை நிரை, நேர் நிரை என நான்காம்.

இவற்றிற்கு உதாரணவாய்ப்பாடு.

| | |
|---|---|
| நேர் நேர்=தேமா. | இவை அகவற்சீர் எனவும் பெயர் பெறும். |
| நிரை நேர்=புளிமா | |
| நிரை நிரை=கருவிளம். | |
| நேர் நிரை=கூவிளம். | |

341. உரிச்சீர் அல்லது மூவசைச்சீர் என்பது, மேற்சொல்லப்பட்ட இயற்சீர் நான்கில் ஈற்றிலே நேரசையும் நிரையசையும் தனித்தனி கூடிவருவனவாகிய எட்டுச் சீர்களும் ஆம்.

இவற்றிற்கு உதாரணவாய்ப்பாடு.

| | |
|---|---|
| நேர் நேர் நேர்=தே மாங் காய்<br>நிரை நேர் நேர்=புளி மாங் காய்<br>நிரை நிரை நேர்=கரு விளங் காய்<br>நேர் நிரை நேர்=கூ விளங் காய் | காய்ச்சீர் (௪-ம்) வெண்பாவிற் குரியன; இவை வெண்சீர் எனவும் படும். |
| நேர் நேர் நிரை=தே மாங் கனி<br>நிரை நேர் நிரை=புளி மாங் கனி<br>நிரை நிரை நிரை=கரு விளங் கனி<br>நேர் நிரை நிரை=கூ விளங் கனி | கனிச்சீர் (௪-ம்) வஞ்சிப் பாவிற்கு உரியன; இவை வஞ்சிச்சீர் எனவும் படும். |

**342.** பொதுச்சீர் அல்லது நாலசைச்சீர் என்பது மேற்சொல்லிய மூவசைச்சீர் எட்டின் ஈற்றிலும், நேரசையும் நிரையசையும் தனித்தனி அடுத்துவருதலால் ஆகிய சீர் பதினாறும் ஆம்.

இவற்றிற்கு உதாரண வாய்ப்பாடு.

| | |
|---|---|
| தே மாங் தண் பூ | தேமாந் தண் ணிழல். |
| புளி மாங் தண் பூ | புளி மான் தண் ணிழல். |
| கரு விளங் தண் பூ | கரு விளந் தண் ணிழல். |
| கூ விளங் தண் பூ | கூ விளந் தண் ணிழல். |
| தே மா நறும் பூ | தே மா நறு நிழல். |
| புளி மா நறும் பூ | புளி மா நறு நிழல். |
| கரு விள நறும் பூ | கரு விள நறு நிழல். |
| கூ விள நறும் பூ | கூ விள நறு நிழல். |

இவை வெண்பாவினுள் வருவனவல்ல. கலியினுள்ளும் அகவலுள்ளும் பெரும்பாலும் குற்றியலுகரம் வந்த விடத்தன்றி வாரா. வஞ்சிப்பாவினுட் பெரும்பாலும் வரவும், ஓரடியில் இரண்டு நாலசைச்சீர் கண்ணுற்று நிற்கவும் பெறும்.

**343.** தளையென்பது நின்றசீரின் முதலசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனும் தொடர்ந்து நிற்பது.

(*a*) நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வருதல் ஒன்றிவருதலாம்.

(*b*) நேர்முன் நிரையும், நிரைமுன் நேரும், வருதல் ஒன்றுவது வருதலாம்.

**344.** அது நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை, கலித்தளை என ஏழாம்.

**345.** ஆசிரியத்தளையாவது நேரோடு நேரும் நிரையோடு நிரையும் ஒன்றிவருவது ஆம்.

(உ-ம்.) திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணவ ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே.

இதில், கருவிளம்-கருவிளம்-கருவிளம்-புளிமா
கூவிளம்-கருவிளம்-புளிமா
கூவிளம்-புளிமா-தேமா-தேமா.

என நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வந்தமை காண்க.

**346.** வெண்டளை யென்பது மாமுன் நிரையும், விளமுன்நேரும், காய்முன் நேரும் வருவது ஆம்.

(உ-ம்.) உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

இதிற் கருவிளம்-தேமாங்காய்- தேமா-கருவிளங்காய்
தேமாங்காய்-தேமா-பிறப்பு
என வந்தமை காண்க.

காய் முன் நேர் : வெண்சீர் வெண்டளை ; விளமுன்நேரும் மாமுன் நிரையும் ; இயற்சீர் வெண்டளை.

347. அடி என்பது தளையினலே இணைக்கப்பட்ட சீரோடு வருவதாம்.

348. அஃது இருசீரால் வருவது குறளடி எனவும், முச்சீரால் வருவது சிந்தடி எனவும், நாற்சீரால் வருவது அளவடி அல்லது நேரடி எனவும், ஐஞ்சீரால் வருவது நெடிலடி எனவும், ஐந்தின் மிக்க சீரால்வருவது கழிநெடிலடி எனவும் ஐந்துவகை ஆம்.

349. தொடையாவது அடிகளிலும் சீர்களிலும் எழுத்துக்கள் இசையத் தொடுப்பது ஆம்.

அஃது, எதுகைத் தொடையும், மோனைத் தொடையும் என இருவகையாம்.

350. எதுகைத்தொடையாவது அடிகளில் முதலெழுத்துக்கள் மாத்திரம் அளவில் ஒத்துநிற்க இரண்டாம் எழுத்து இசையத் தொடுப்பது ஆம்.

(உ-ம்.) மலர் மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

இதில், மல என்பதற்கு நில என்பது எதுகையாம்; கட்டென்பதற்கும் பட்டென்பது எதுகையாம்; பாட்டென்பது எதுகையாகாது.

351. மோனைத்தொடையாவது முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களில் ஒன்றினுள் ஆயினும் பலவற்றினுள் ஆயினும் முதலெழுத்து ஒன்றி வருவது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ, | ஆ, | ஐ, | ஔ, | } | இவை ஒன்றுக்கொன்று மோனையாம். |
| இ, | ஈ, | எ, | ஏ, ய, | | |
| உ, | ஊ, | ஒ, | ஓ. | | |
| ச, | த, | | | | |
| ஞ, | ந, | | | | |
| ம, | வ, | | | | |

(உ-ம்.) மேற்கண்ட குறட்பாவில் ம-வும்; மா-வும், கீ-யும், கீ-யும் மோனையாக வந்தன காண்க.

352. பாவென்பது இரண்டு முதலிய அடிகளால் ஆக்கப்பட்டு வெண்பா முதலிய பெயர் பெற்றுவருவது ஆம்.

353. அது வெண்பா, அகவற்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம் எனப் பலவகைப்படும்.

354. அவற்றுள் வெண்பா ஈற்றடி முச்சீரடியாகவும் ஏனைய அடி நாற்சீரடியாகவும் பெற்றுக் காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையுங்கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெறாது, காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்ப்பாடுகளால் முடிவது ஆகும்.

355. அது குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, சவலை வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசைவெண்பா என ஐந்து வகைப்படும்.

(1) இவற்றுட் குறள்வெண்பா, நாற்சீர், முச்சீர் என இரண்டடியாய் வருவது.

(உ-ம்.) கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடைய கல்லா தவர்.

(2) சிந்தியல் வெண்பா நாற்சீர், நாற்சீர், முச்சீர் என மூன்றடியால் வருவது.

(உ-ம்.) மாமதுரை மங்கையற்கண் மாதுமையின் கண்ணிறைந்த
தாமதுரை சாமீ தயாபரவென்—சோமமுடிச்
சுந்தரனின் றுளே துணை.

(3) சவலை வெண்பா இரண்டு குறள் தனிச்சொல் லின்றி வருவது.

(உ-ம்.) அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

(4) நேரிசை வெண்பா நான்கடியாய் இரண்டாம் அடி இறுதிச்சீர் தனிச்சொல்லாய் வருவது.

(உ-ம்.) தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
யரிவதூஉஞ் சான்றோர் கடன்.

(5) இன்னிசை வெண்பா நான்கடியாய்த் தனிச்சொல் இன்றிவருவது.

(உ-ம்.) இன்றுகொ லன்றுகொ லென்றுகொலென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையால்
மருவுமின் மாண்டா ரறம்.

356. அகவற்பா நாற்சீரால் வரும் அளவடியாய் இயற்சீர் பயின்று, அயற்சீர் விரவி, தன் தளை தழுவி, பிறதளை மயங்கி, கருவிளங்கனி, கூவிளங்கனி யென்னும் இரண்டு சீருங் கலவாது மூன்று முதலிய பலவடிகளால் வருவது.

(உ-ம்.) நீரிடை நுரையி னேர்கெடு மிளமையே
காரிடை மின்னிற் கடிதிறும் புகழே
தேரிடை யுருளிற் செல்வ மாறுமே
தாரிடை மதுவினிற் றவிர்ந்தொழி மின்பமே.

357. இதன் ஈற்றடியின் இறுதிச் சீரின் ஈற்றிலே ஏகாரம் பெரும்பாலும் வரும்.

358. அகவல் ஆசிரியம் ஒருபொருட் சொற்கள்.

**359.** கட்டளைக்கலித்துறையாவது ஒவ்வோரடியிலும் ஐந்து சீர்பெற்று, வெண்டளை பிழையாது, இறுதிச்சீர் கூவிளங்காயாய் ஆவது கருவிளங்காயாய் ஆவது வருவது.

இதில் ஓரடிக்கு எழுத்து முதலசை நேர் ஆயின் ஒற்றொழித்துப் பதினாறும், நிரையாயின் பதினேழும் ஆம். இஃதெப்பொழுதும் ஏகாரவீற்றசை பெறும்.

(உ-ம்.) ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதன்
னருகிருந்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையில்
னித்தலித்தம்
வேய்முத்த ரோடென்குறைகளெல்லா மெல்ல
மெல்லச் சொன்னால்
வாய்முத்தஞ் சிந்தி விடுமோநெல் வேலி
வடிவம்மையே.

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கென்னு
மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கென்னு
தான் புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந்
நாறுடலைப்
பிரிய முடன்வளர்த் தேனித னாலென்ன
பேறெனக்கே.

**360.** விருத்தமாவது எல்லாச்சீரானும் எல்லா அடிகளானும் அளவொத்து வருவது.

**361.** அது தளையின்றி நடக்கும் ஆயினும் அதற்குரிய பொதுவிதியாவது, ஓரடியில் தேமா வந்தவிடத்து மற்றோரடியில் தேமா ஆயினும புளிமா ஆயினும் வரும். விளம் வந்தவிடத்து மற்றோரடியிற் கூவிளம் ஆயினும்

கருவிளம் ஆயினும் வரும். காய் ஈற்றுச்சீருக்குக் காய் ஈற்றுச்சீரும் கனி ஈற்றுச்சீருக்குக் கனி ஈற்றுச்சீரும் வரும்.

மற்றவைகளும் இவ்வாறே.

362. சீர் தம்முள் மாறிவரிற் சந்தபேதமாம்.

(உ-ம்.) கடுமனவன் பேய்கனலிற் கொடிதாகு மலைகளினுங்
கடத்தற் கொண்ணு
நெடுவயிரத் தினும்வலிது கடல்பருகி மேருவினை
நேரே பேர்த்துச்
சுடுகழலை விழுங்குகினு மிறுத்தரிது புலன்முழுதுந்
தோன்று மூலங்
கெடுமுலகீ துண்டெனிலுண் டிலதாகி லிலதிதனைக்
கெடுத்தல் வேண்டும்
தழையுமியல் பிற்றெனும் பத்தியுறு மனனுடைய
தரணியீர் தாமதமெவ
னழலிடை யகப்பட்டு மாழ்குறு புழுப்போல
வழியாது வருதிர் நம்மை
யழையிருந் தனுதினமு முண்மைநெறி யிற்செல
வுறுப்பவற் பாடியேத்தி
விழைவிட னவன்றன தருட்கடலின் மேலிநனி
விளையாடி யாடுதுமரோ.

யாப்பியல் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

## A Short Geography of the World

***For Lower Secondary Candidates.***

By K. PARAMU PILLAI, M.A.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Part I—Asia | 0 | 1 | 6 | Part III—Africa, &c. | 0 | 1 | 6 |
| „ II—Europe | 0 | 1 | 6 | | | | |

---

## A TEXT-BOOK OF ALGEBRA

With Numerous Model Solutions and Graduated Exercises

**For the use of Lower Secondary Candidates.**

By V. R. VENKATARAMA AIYAR, B.A., L.T.

*Second Edition—Revised and Enlarged.* **Price As. 9.**

---

## A TEXT-BOOK OF ARITHMETIC

***For the use of Lower Secondary Candidates.***

By V. R. VENKATARAMA AIYAR, B.A., L.T.

*Second Edition—Revised and Enlarged.* **Price As. 9.**

---

PERCIVAL'S ENGLISH AND TAMIL DICTIONARY

**Revised Edition, Cloth Gilt—Price Re. 1-4-0.**

**TRANSLATION GUIDE No. 1**

ANGLO TAMIL

**For the use of Middle School Departments.**

By C. APPASAWMY PILLAI.

**Price As. 8.**

---

# ALGEBRA

***Fer Lower Secondary Schools.***

By K. G. VENKATASUBBA AIYAR, B.A., L.T.

**Price As. 9.**

---

**A SYNOPSIS OF MARSDEN'S INDIAN HISTORY,**

with a Grind, containing exhaustive Questions aud Answers.

By A. C. SHUTIE, B.A.

**Price As. 6.**

---

**The Middle School Manual of English**

By R. S. SHEPPARD, B.A.

**Price Re. 1.**

## MINERVA LETTER WRITER

By F. W. HOOPER, B. A.,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Part—I | 0 | 6 | 0 |
| Do. | do. | Part—II | 0 | 8 | 0 |

---

# HISTORY OF INDIA

**For Junior Classes.**

By. M. S. PURNALINGAM PILLAI, B.A.

**Price As. 6, Paper cover. As. 8, Cloth.**

---

## THE BEGINNER'S HISTORY OF INDIA

By C. T. PARTHASARATHI MUDALIAR, B.A., L.T.

**Second Edition, Price As. 5.**

---

# VIVEKA VILAKKAM

A Tamil Poetical Anthology for the Middle School Classes.

Prepared and Edited

By M. S. PURNALINGAM PILLAI, B.A.

**Price As. 4.**

**FULL NOTES** by N. BALARAMA AIYAR. **Price As. 6.**

## VACHAKA TIRATTU

A Tamil Prose Anthology, Demy 8vo., 113 pp., containing 13 stories, specially written for the book. Edited by the same Author.

**Price As. 8.**

---

## WITTY STORIES

By the same Author.

**Price As. 1½.**

---

## NALAVENBA

Revised

By V. G. SURYANARAYANA SASTRIAR, B.A.

**Price As. 4.**

---

## PANCHATANTRAM

Revised

By V. G. SURYANARAYANA SASTRIAR, B.A.

**Price As. 4.**

---

***Apply to:—***

THOMPSON & CO.,

*Publishers, 33, Popham's Broadway, MADRAS.*

# தமிழ் புத்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| யர் இலக்கணம் வி. கோ. சூரிய ண சாஸ்திரியார் பார்வையிட்டது. | 0 | 3 | 0 |
| பா (மூலம்) ஷை ஷை ... | 0 | 4 | 0 |
| துப் பரணி ஷை ஷை ... | 0 | 8 | 0 |
| தந்திர வசனம் ஷை ஷை ... | 0 | 4 | 0 |
| றன்மணீயம் ... | 0 | 8 | 0 |
| ய்யுட்கோவை (ஸ்டிப் போர்ட்டு) ... | 0 | 10 | 0 |
| விவேக விளக்கம் மூலம் ... | 0 | 4 | 0 |
| ஷை உரை N. பலராமய்யரால் எழுதப் பட்டது ... | 0 | 6 | 0 |
| 9. வாசகத் திரட்டு ... | 0 | 4 | 0 |
| 10. ஔவை குறள் மூலம் ... | 0 | 2 | 0 |
| 11. சாவித்திரி வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரால் எழுதப்பட்டது ... | 0 | 10 | 0 |
| 12. அரிச்சந்திரா ... | 0 | 10 | 0 |
| 13. தமன்யரூபி (நாவல்) ... | 1 | 4 | 0 |
| 14. விஜய சுந்தரம் ஷை ... | 1 | 8 | 0 |
| 15. மரியாதைராமன் கதை, அப்பாஜி கதை ... | 0 | 1 | 6 |
| 16. மச்சபுராணம் (செய்யுள்) ... | 2 | 8 | 0 |
| 17. திருமுல்லைவாயிற்புராணம் (காலிகோகட்டடம்) | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்கட்டடம்) | 0 | 8 | 0 |
| 18. ரத்னமாலிகா, வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரால் இயற்றியது ... | 1 | 0 | 0 |
| 19. தசரதன் தவரு, ஒரு தமிழ் நாடகம், N. பலராம அய்யரவர்களால் இயற்றியது ... | 0 | 4 | 0 |
| 20. போஜ சரித்ரம் தமிழ் ... | 2 | 8 | 0 |
| 21. அரவிந்தலோசனி (நாவல்) ... | 0 | 8 | 0 |
| 22. கிரிமினல் வியவகார ஸங்கிரகம் (காலிகோ) K. R. கிருஷ்ணமாசாரி அவர்களால் இயற்றப்பட்டது ... | 2 | 8 | 0 |
| ஷை (லிப் பயிண்டு) ... | 2 | 0 | 0 |